வேதியர் கொள்கையை வேரறுக்கும் முறை!

இந்தத் தலைமுறையில்
ஏதோ ஒருவழியில்
முந்தைத் தமிழினத்தை
முன்னேற்ற வேண்டும், நாம்
சொந்தத் திரு மொழியும்
தொன்மைப் பெருநாடும்
சிந்துப் பகைவரினால்!
சீரழியும் என்பதனால்!

மோதல் தமிழினத்துள்
முற்றும் தவிர்த்திடுக!
காதல் தமிழ்மொழிமேல்
கற்றவர்கள் கொண்டிடுக!
சாதி யொழிப்பும்
தூய தமிழ் வழக்கும்
வேதியர் கொள்கையினை
வேரறுக்கும் என்பதனால்!

www.thamizham.net - Free E book No 7502

நமக்கு வந்த மடல்கள்.

0:792: 'தென்மொழி' அன்பர்கட்கு, தென்மொழியை நம்மொடு நாமே மோதிக்கொள்ளும் போர்க்களம் ஆக்கல் வேண்டா. நம்மில் யாரேனும் நம்மவரைப் பற்றிக் குறை கூறினால் அதனை ஆய்க! பின்னர் கொள்ளுக அல்லது தள்ளுக. உணர்ச்சி வயப்பட வேண்டா—மறுப்புரைகளும் அறுப்புரைகளும் வெறுப்பையே வளர்க்கும் நமது ஆற்றலைக் காட்டவேண்டிய இடம் வேறு உளது. குறிக்கோளை மறவற்க.

தென்மொழி ஆசிரியர்க்கு, மறுப்புரைகளுக்கும், அறிக்கைகளுக்கும் தென்மொழியில் இடம் தர வேண்டா. தேவைப்படின் தங்களுக்கேற்புடைய கருத்தினை மேற்கொண்டு தாங்களே விளக்கம் தரலாம். ஒரு சில வரிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் மடல்களுக்கே இடம் தருக. இவை எமது அன்பான வேண்டுகோள்கள். — **தமிழ்வேலன்** மன்னார்குடி.

0:793: பெருமதிப்பிற்குரிய பேரன்புகெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம்... தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தாங்கள் இருமுறை தோன்றித் தமிழின் பெருமையையும் உரிமையையும் தமிழர் கடமையையும் விளக்கி வெற்றிக்கொடி நாட்டிய விளத்தமெல்லாம் தென்மொழியில் விளக்கமாகக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். தாய்மொழியின் பெருமையை உரிமையைத் தமிழரனைவரும் உணரவும், தமிழ்த் தாயின் தளையகலவும், தமிழன்னை தன்னுரிமையை யெய்தித் தழைத்தினி தோங்கவும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல அடுத்தடுத்துத் தங்கட்கு அமையவேண்டும் எனும் விழைவுடையேன்.

"கலைஞர்க்கு நேரடி வேண்டுகோள்!" என்னும் தென்மொழியின் கனிவான ஆசிரியவுரை தலைசிறந்தது! நிலை விளக்கம் அருமை! மிக மிக அருமை! அதன் ஒவ்வொரு சொல்லும் உயிர்த் துடிப்புடையது! முக்கால நிலைகாட்டும் மெய்ம்மை சான்றது! அஃது ஓர் உணர்வின் குன்றாய், அன்பின் அருவியாய், பிறர் நலம் நாடிப் பெருகிப் பாயும் பெருமிதப் பேராறாய், அறிவின் ஆழியாய் தென்றலின் உயிர்ப்பாய், தித்திக்கும் முக்கனியின் பிழிசாறாய்த் திகழக் கண்டு சிந்தை களித்தேன்! தமிழ், தமிழின, தமிழக விடுதலைக்காகவே தமிழ்த்தாயின் தவச்செல்வராய்த் தோன்றித் தன்னலம் கருதாமல், தமிழ் நலம் ஒன்றே கருதும் விடுதலைப் பெரும்பாவலராய் விளங்கும் தங்கள் தமிழ் நெஞ்சத்தின் வேண்டுகோள், தமிழ்த்தாய் தன் தலைமகனுக்குத் தந்த ஆணை என்றே கருதுகின்றேன். ஆசிரியவுரையின் ஒவ்வொரு சொல்லிலும் உயர்ந்த அறிவொளியும், தமிழின விடுதலை வேட்கையும், நம் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களின் தமிழ்ப் பற்றூர்ந்த கனிவுள்ளத்தையும், உயர் கொள்கை உரத்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7502

கஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

சுவடி: 17 ஓலை: 1.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மடங்கல். தி. பி. ௨௰௧௧-

ஆக-செப்-1980.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்

அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன]

சாதியொழிப்பும் தமிழ்ச் செழிப்புமே பார்ப்பனியத்தை அழிக்கும்!

ஆரிய திரவிடப் போராட்டம் மீண்டும் தொடங்கியிருப்பது போல் நிகழ்ச்சிகள் சில நடந்து வருகின்றன. திராவிடர் கழகத் தலைவர் திரு. வீரமணியவர்கள் 'பார்ப்பனிய வல்லாண்மை எதிர்ப்பு மாநாடுகள்' நடத்துவதும், பார்ப்பனர்களும் 'பிராமணச் சார்பான ஊர்வலங்கள் நடத்துவதும், ஆங்காங்கே 'பிராமண சங்கங்கள்' அமைப்பதும் அண்மையில் நடந்த — நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையான கரணியம் ஓரினத்தை மற்றோரினம், அழித்தொழிக்கும் எண்ணமாக இருத்தல் முடியாது என்பதை நடுநிலையான 'குமுகாய நோக்கர்கள்', மக்கள் அனைவரின் நலம் நாடும் பொதுநிலை அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். இந்தியா பல இன மக்கள் வாழ்கின்ற, பல மொழிகள் பேசப் பெறுகின்ற ஒரு பெரிய நாடு; பல வகையான வேறுபாடுகள், சாதிகள், குலங்கள், 'கோத்திரங்கள்', கிளைப் பிரிவுகள் முதலியன குப்பைத்தொட்டியில் ஈக்கள் மொய்ப்பன

www.thamizham.net - Free E book No 7502

போல், உள்ள ஒரு பெரிய நிலப் பரப்பு இது. இவற்றின் தீ நாற்றத்தை யெல்லாம் அடியோடு மூடி மறைத்து விட்டு, அரசியல் ஊதியத்துக்காக—பொருள் நாட்டத்திற்காகத் தேசியமும் ஒருமைப்பாடும் பேசுகின்ற முடிமறைப்பான்களைப் பற்றியும், அரசியல் திருடர்களைப் பற்றியும், ஏழைகளை ஊறிஞ்சிச் சாப்பிடுகிற எத்தர்களைப் பற்றியும் இங்கே நாம் பேச முன்வரவில்லை. இங்கே இன முறையில், குமுகாய வகையில், இத்தனை வேறுபாடுகளையும் அப்படியே வைத்துக்கொண்டு, வளர விட்டுக் கொண்டு, ஆண்டுக்கு ஆண்டு 'குடியரசு நாள்', 'விடுதலை நாள்' கொண்டாடுகின்ற கொள்ளைக்காரர்கள், ஏமாற்றுக்காரர்களைப் பற்றித்தான் நாம் இங்கே சில செய்திகளை மனம் விட்டுப் பேசியாகல் வேண்டும்.

இந்தியா தன்னுரிமை பெற்று முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆகியும் நமக்குள் இருக்கின்ற வேறுபாடுகளும் மாறுபாடுகளும் சாதியிழிவுகளும், ஒருவரை யொருவர் ஏமாற்றிப் பிடுங்கித் தின்னும் வஞ்சகங்களும், ஏழைத் தொழிலாளர்களை உறிஞ்சிக் கொழுக்கும் உன்மத்தங்களும் சிறு அளவிலேனும், ஒரு கடுகு அளவிலேனும் குறையும்படி நாம் ஏதாவது செய்துள்ளோமா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நாளுக்கு நாள் அரசியல் கொண்டாட்டங்கள், பிறந்த நாள் திருவிழாக்கள், புரையோடும் பொழுது போக்குகின்ற கலை நிகழ்ச்சிகள் என்று இவைதாமே அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அரசியல் சார்பான, அதிகாரத் தொடர்பான சட்ட திட்டங்கள்தாமே திருத்தப் பெற்றும், புதியனவாக அமைக்கப் பெற்றும் வருகின்றன. அதிகாரப் பகிர்வுகளுக்கும் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் பச்சைப் பிடுங்கல்களுக்குந்தாமே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். தன்மான அடிப்படையில், குமுகாய முறைகளில் ஓர் ஒழுங்கையும், ஏற்றத்தாழ்வின்மையையும் மிகப் பலருக்குள்ள இழிவு நீக்க முறைகளையும் நோக்கி நாம் சிறு அளவிலேனும் முன்னேறியிருக்கின்றோமா? இல்லையே! பின், எப்படி இத்தகைய போராட்டங்களை யெல்லாம் நாம் தவிர்த்துவிட முடியும்? நிலைமை இப்படியே இருக்குமானால், நம்மிடம் கொலை, குத்துகள், வெட்டுகள் தாமே மிகுதியாகும்.

ஓரினத்தவர், அதுவும் மக்கள் தொகையில் நூற்றுக்கு மூன்றே பேருள்ள மிக மிகச் சிறிய அளவினரான பார்ப்பனர், தம்மை மேலான சாதியாக, பிராமணராகக் கூறிக்கொண்டு, பிற மக்களைத் தாழ்ந்த, இழிந்த சாதியாராகக் கூறிப் பெருமை பேசுவதும், அதற்கான உடல் அடையாளங்களை இட்டுக் கொள்வதும் எல்லாப் பொது மக்களும் சரிசம உணர்வுடன் புழங்கவேண்டிய இடங்களில் தாங்கள் போய் அடைந்து கொண்டு, சண்டி மாடுகள் போல் பிறர்க்கு வழி விடாமல் தடுப்பதும் நம் கண்ணெதிராகத்தாமே நடந்து கொண்டு வருகின்றன. இவற்றைப் பற்றி நம் அமைச்சர்கள், தலைவர்கள்

www.thamizham.net - Free E book No 7502

எனப் பெறுவோர் எவரேனும் கவலைப்பட்டதுண்டா? பேசுவது உண்டா? இவற்றை மாற்றுவதற்கான சட்ட திட்டங்களைக்கொண்டு வந்தது, அல்லது கொண்டு வர முயற்சி செய்ததாவது உண்டா? ஓரினத்தார் மட்டும் தெய்வத்துக்கொப்பாகத் தங்களை உயர்த்திக் கொள்வதும், பிற அனைவரையும், உழைக்கின்ற பிற இனத்தவர்களை யும் தங்களுக்கென்றே உழைக்கும்படியாக ஆண்டவன் படைத் தான் என்பதும் என்ன அறநெறி? என்ன சட்டம்? இஃதெப்படி குடியரசு நாட்டுக்குப் பொருந்தும்—சமநிலை உணர்வாகும்? இந்த ஏற்றத்தாழ்வு நிலைகள் இருக்கும் வரை இவ்வகையான போராட் டங்களும் இருந்தே தீரும். எதிர்காலத்தில் இன்னும் வலுப்பெற்று நடக்கும்.

மத அடிப்படையில், ஓர் இனத்தவர் மேலாளுமையே செயல்படு மாறு நம் சட்டங்களையும் நடைமுறைகளையும் வகுத்துக் கொண்டு, எல்லாருக்கும் உரிமை, எல்லாருக்கும் சமநிலை என்று காட்டுக் கூச்சலாய்க் கத்துவதால், அடக்கி யொடுக்கப் பெற்றுக் கிடக்கும் மக்களுக்கு உரிமை வந்துவிடப் போவதில்லை. இந்த நாட்டை அரசியல் வல்லுநர்கள் ஆள்கிறார்கள் என்று சொல்வதை விட மதத் தலைவர்கள்தாம் வழி நடத்துகின்றனர் என்று சொல்லப் பெறுவதே மிகப் பொருத்தமானதும், சரியானதுமாகும். இந்நாட்டின் தலைமை யதிகார விடத்தில் இருந்து கொண்டிருக்கும் தலைமையமைச்சர் இந்திரா காந்தி முதல், இங்குள்ள ஓர் அடிமை அமைச்சர் வரை, எல்லாரும் மதத் தலைவருக்கு ஆட்பட்டுத்தானே செயல்களைச் செய்து வருகின்றனர். இஃதெப்படி ஒரு தன்னுரிமை நாடாக இருக்க முடியும்? அண்மையில் 'காஞ்சி காமகோடி பீடாதிபதியின்' பிறந்த நாள் ஒன்று தில்லியில் கொண்டாடப் பெற்றது. அவ்விழாவில் இந்நாட்டின் ஐம்பது கோடி மக்களின் தலைவர் கலந்து கொண்டு அவர் தொடர்பான நூலொன்றை வெளியிட்டுப் பேசிய பேச்சுகள் எவ்வளவு அடிமைத்தனமானவை, அருவருப்பானவை. அப்பேச்சில் சில பொதுவான மதக் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றார், இந்திரா காந்தி. அதில் 'குறுகிய மனப்பான்மைகளிலிருந்து விடுதலை பெறு வதே மதம்' என்ற 'பொன்மொழி' யொன்றையும் வாயவிழ்த்திருக் கின்றார் அவர். இந்தப் 'பொன்மொழி'க்கும் அந்தக் காஞ்சி ஆச் சாரியாருக்கும் ஏதாவது ஒரு வகையிலேனும் தொடர்பிருக்கின்றது என்பதை இந்திரா காந்தியால் எடுத்துக்காட்ட முடியுமா? குறுகிய மனப்பான்மையே உருக்கொண்ட ஒருவரின் பிறந்த நாள் விழாவில் இந்நாட்டின் தலைமையமைச்சர் எப்படிக் கலந்து கொள்ளலாம்? தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் மட்டும் ஓர் உயர்ந்த பிறப் பினராகக் கருதுபவர், 'சாதிகள் இறைவனால் வகுக்கப் பெற்றன, அவை வேதங்களில் கூறப் பெற்றுள்ளன, எனவே அவை இருக்க வேண்டும், அவற்றின்படிதான், அவரவர் சாதிக்கென்று வகுக்கப் பெற்றுள்ள முறைகளைத்தாம் எல்லாரும் பின்பற்றுதல் வேண்டும்,

www.thamizham.net - Free E book No 7502

வாழ்க்கை நடத்துதல் வேண்டும்' என்று கூறுபவர்—எப்படிக் குறுகிய மனப்பான்மை யில்லாதவராவார்? 'அறிவியல் முன்னேறி வரும் இவ்விருபதாம் நூற்றுண்டுக் காலத்திலும், சாதிப் போராட்டங்கள், வகுப்புப் போராட்டங்கள் மிகுந்து வருகின்றனவே!' என்று நீலிக்கண்ணீர் வடிக்கும் தலைமையமைச்சர், இப்படிப்பட்ட கருத்துடையவர் ஒருவரின் விழாவில் எப்படிக் கலந்து கொள்ளலாம்? அப்படியானுல் இந்திராவின் கருத்து யாது? காஞ்சி காமகோடியாரின் நடை-முறை, ஒழுக்கம், அறிவு, கடவுள் தன்மை—இவை எப்படியாகிலும் இருக்கட்டும். அவற்றைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. தனிப்பட்ட முறையில்—இந்திரா தலைமையமைச்சர் என்ற முறையில் அன்று, காஞ்சி காமகோடியார் வகையில் எப்படி வேண்டுமானுலும் நடந்து கொள்ளட்டும். அவருடைய 'ஒளியால்' இவர் மயங்கட்டும்; அதன் பொருட்டு அவர் பாதங்களில் விழுந்து கிடக்கட்டும். யாரும் அதைப் பற்றிக் கேட்க முன்வர மாட்டார்கள். ஆனுல் தலைமையமைச்சராக இருந்து கொண்டு, இத்தகைய 'மகான்' களால்தான் மக்களுக்குச் சரியான வழிகாட்டி நடத்திச் செல்ல முடியும்' என்றும், 'அவர் மேலும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து, இந்தியாவுக்கு ஒளியைப் பரப்பி, அந்த ஒளியை இந்தியா மற்ற நாடுகளுக்குப் பரப்பி வரும்' என்று தாம் நம்புவதாகவும் கூறியிருக்கின்ருரே, அதைப் பற்றித்தான் நாம் கவலைப்படுகின்ரேம்; அவர் பற்றி நாம் ஐயப்படுகிரேம். இந்திரா, 'காஞ்சி காமகோடியார் மக்களுக்கு வழிகாட்டி' என்கின்ருரே, காமகோடியாரோ 'சாதிகள் இறைவனின் படைப்பு; அவற்றின்படிதான் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும்' என்கின்ருரே, இவர் தலைமையமைச்சராக இருந்து எல்லாப் பிரிவினர்க்கும் சமநிலை உணர்வுடன் பாடாற்றுவார் என்பதை எப்படி நம்புவது? இதிலிருந்தெல்லாம் நமக்கு என்ன தெரிகிறது என்ருல், 'பார்ப்பனீயம் என்றைக்கும் தன் நச்சுத் தன்மையை நீக்கிக் கொள்ளாது' என்பதுதான். பேசுவது ஒன்று; நடப்பது ஒன்று. நாடும் அரசியலும் இப்படி இரட்டைத்தனமான போக்கில், எதிரெதிரான திசையில் போய்க்கொண்டிருந்தால், இழிவு படுத்தப்படுகின்ற பெரும்பான்மையான மக்கள் கிளர்ந்தெழாமல் என்ன செய்வார்கள்? அவர்கள் தங்களுக்குள் தாங்களே ஒரு முடிவை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதானே, இந்திரா போன்றவர்களின் போக்குகளால் ஏற்படுகின்ற முடிவு. எனவேதான் ஆரிய திராவிடப் போராட்டங்கள் மீண்டும் தோன்றிலும் அதற்கு வீரமணி போன்றவர்கள் பொறுப்பாக மாட்டார்கள். தலைமை யதிகாரத்தில் இருப்பவர்கள் நிடுநிலை திரிந்து நாட்டை ஆண்டுகொண்டு போகின்ற போக்குகளாலேயே அப்போராட்டங்கள் ஊக்குவிக்கப் பெறலாம் என்று தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். இனி, திரு. வீரமணி போன்றவர்கள் இப் போராட்டங்களைத் தொடங்குவதற்கு முன் ஒன்றை நன்ருக எண்ணிப் பார்த்துக்

www.thamizham.net - Free E book No 7502

கொள்ளல் வேண்டும். முதலில் இப்போராட்டத்திற்கு முன் நம்மவர்களை நன்றாக விழிப்புணரச் செய்வதும், ஒற்றுமைப்படுத்த வேண்டுவதும் தலையாய கடமைகள். பார்ப்பனியத்தை (பார்ப்பனர்களை யல்ல) நாம் தகர்க்க விரும்பினால் அதற்கு ஆன முயற்சி பார்ப்பனர்களிடம் செய்யக் கூடாது; செய்து பயனில்லை. நம்மவர்களிடந்தாம் செய்ய வேண்டும். பார்ப்பனியத்தை நாம் தவிர்க்க விரும்புகிறோம் என்றால், அதன் மேலாளுமையை நீக்கப் பாடுபடுகிறோம் என்றால், அந்தப் பார்ப்பனர்களால் உருவாக்கப் பெற்ற சாதிகள் நமக்கெதற்கு? இப்படிக் கேட்பதால் திரு. வீரமணியவர்கள் 'சாதிகள்' வேண்டும் என்று சொல்வதாக நாம் கருதுவதாக எண்ணக்கூடாது. அவரின் சாதி மறுப்புக் கொள்கை வெளிப்படையானது. அதைப் பற்றி யாருக்கும் ஐயமில்லை. ஆனால் அந்த வுணர்வை நாம் விலக்க விரும்புகிறோம் என்றால், எப்படி, அந்த வுணர்வை நீக்குவது? அதைப் பொருளியல் முன்னேற்றத்துக்காகத்தான் நாம் ஏன் அழிக்காமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்? நூற்றுக்கு மூன்று பேராக வுள்ள பார்ப்பனர்கள் தங்களின் இனவொற்றுமையினாலும், அறிவின் மேல் வைத்த நம்பிக்கையினாலும், கூட்டுணர்வினாலும் கடந்த ஈராயிரமாண்டுகளாக இந்நாட்டில் தொடர்ந்த ஒரு பிழைப்பை—வாழ்க்கையை நடத்தி வருகின்றார்களென்றால், நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேராக வுள்ள நாம் ஏன் நம் அறிவின் மேல் அவநம்பிக்கையும், உழைப்பின் மேல் நம்பிக்கையின்மையும், ஒற்றுமையின் மேல் ஐயமும் கொள்ளுதல் வேண்டும்? உண்மையிலேயே பார்ப்பான் நம்மை அடிமைப்படுத்தவில்லை; பார்ப்பனியந்தான் நம்மை அடிமைப்படுத்தி யிருக்கின்றது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவன் சாதிப் பெருமைக்காகத் தன்னைப் 'பிராமணன்' என்று சொல்கின்றான் என்றால், நாமும் ஏதோ ஒரு காரணியத்திற்காக ஏன் நம்மை பிற்படுத்தப் பட்டவன், தாழ்த்தப்பட்டவன், என்றெல்லாம் கூறிக் கொண்டு, அவன் நம்மைச் சூத்திரன் என்று சொல்லாமற் சொல்வதற்குப் பொருளேற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவனைப் 'பிராமணன்' என்று சொல்வதால் நம்மைச் 'சூத்திரன்' என்று ஒப்புக்கொண்டதாகும் என்றால், நம்மைச் 'சூத்திரன்' என்று சொல்லிக் கொள்வதால், அவனை நாம் 'பிராமணன்' என்று உயர்த்திவிட்டோம் அல்லது அவன் தன்னைப் 'பிராமணன்' என்று கூறுவதை நாமும் ஒப்புக் கொண்டோம் என்பதாகாதா? 'சூத்திரன்' என்றால் என்ன? 'பிற்படுத்தப்பட்டவன்' அல்லது 'தாழ்த்தப்பட்டவன்' என்றால் என்ன? எல்லாம் ஒன்றுதானே! 'குப்பை' என்றால் என்ன? அல்லது 'தள்ளப்பட்டது', 'ஒதுக்கப்பட்டது' என்றால் என்ன? எல்லாம் தன்மையில் ஒன்றுதானே! சொல்லில்தானே மாறுபாடு. இதை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் பார்ப்பான் என்று அவனை நாம் சொல்கிறோம். அவன்

www.thamizham.net - Free E book No 7502

இனத்துக்குள் 'சாதி'ச் சண்டைகள், குலச் சண்டைகள், 'கோத்திரச் சண்டைகள்' தோன்றுவது உண்டா? ஓர் அய்யரும் அய்யங்காரும், அல்லது ஒரு கோத்திரமும் இன்னொரு கோத்திரமும் முட்டிக்கொண்டன என்று நாம் கண்டிருக்கின்றோமா? மூன்று பேராகவுள்ள அவர்கள் அப்படியிருந்தால், தொண்ணூற்றேழு பேராக உள்ள நாம் ஏன் ஓர் அறுபது விழுக்காடேனும் அப்படி ஒற்றுமையாயில்லை? நமக்குச் செருக்கு அதிகம்; திமிர் அதிகம்; 'சாதி' வெறி மிகுதி; நமக்குள்ளேயே நாம் ஒருவரை ஒருவர் தாழ்த்தப் பார்க்கின்றோம். கெடுக்கப் பார்க்கின்றோம்; ஒருவர் முதுகில் ஒருவர் குத்தப் பார்க்கின்றோம்; அடித்துக் கொள்கிறோம்; அழித்துக் கொள்கிறோம். பார்ப்பான் ஏற்படுத்திக் கொடுத்த சாதியை விடாமல் நாம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே நாம் நம்மை முன்னேற்றிக் கொள்ளப் பார்க்கின்றோம். அவன் நமமை யழைத்த இழிவுப் பெயராலேயே நாம் சலுகைகளையும், பொருள் நலன்களையும் துய்க்கப் பார்க்கின்றோம். அப்படித் துய்த்துக்கொண்டே நாம் நம்மை முன்னேற்றிக் கொள்ள விரும்புகின்றோம். அதற்குப் பலவகையான நொண்டிச் சாக்குகளையும், நொள்ளைக் கரணியங்களையும் கூறி வெட்கமில்லாமல், குமுகாயத்தின் அடிப்படைகளில் நின்று கொண்டு, மடிவிரித்துக் கேட்கின்றோம். நாம் இவற்றாலெல்லாம் எப்படி முன்னேறிவிட முடியும்? இழிவுகளைப் போக்கிக்கொள்ள இயலும்? நம்மை நாமே இழிவு படுத்திக் கொண்டு, பழிகளை அவன் மேல் போடுகின்றோம். அவன் தான் நாம் செய்து கொள்ளும் இழிவுகளுக்குக் கரணியம் என்று கூக்குரலிடுகின்றோம்.

இனி, அறிவு முன்னேற்ற வகையில், பார்ப்பனர் தங்களுக்குள் எப்படி ஒருவர்க்கொருவர் கைகொடுத்து முன்னேற்றிவிட்டுக் கொள்கின்றனர்! எப்படி ஒருவரை ஒருவர் தூக்கி விடுகின்றனர்! ஆ! ஒரு சிறு திறமை எங்கேனும் ஓர் எளிய ஏழைப் பார்ப்பானிடம் இருந்தாலும், என்னமாய் அதைப் பெரிதுபடுத்தி, விளம்பரப்படுத்தி, அனைவருக்கும் தெரியச் செய்து அவனுக்குத் துணை நின்று, அவன் அறிவு முயற்சிக்குத் தூணாக இருந்து தோள் கொடுத்து, எப்படியெல்லாம் அவனை ஆதரித்துப் போற்றுகின்றனர்! அவர்களில் எவராவது ஒருவரை ஒருவர் பின்னிழுக்கின்றனர், அல்லது கீழறுக்கின்றனர்; அல்லது காட்டிக் கொடுக்கின்றனர்; அல்லது பிடித்துக் கீழே அழுக்குகின்றனர்; அல்லது தான் தின்னியாய்த் தான் ஒருவனே, தனக்கு எப்படியோ வாய்த்த 'அரசியல்' 'பொருளியல்' நலன்களைத் துய்க்கின்றனர் — என்று சொல்ல முடியுமா? அவர்களின் வேதமதக் (இந்துமதக்) கொள்கைக்கு எவரேனும் ஒரு சிறு முயற்சி செய்கின்றார் என்றால், அது நம் 'சற்சூத்திரர்'களில் ஒருவராகத்தான் இருக்கட்டுமே, அவரை என்னமாய்ப் போற்றிப் புகழ்ந்து புரந்து காக்கின்றனர் என்பது தெரியாத ஒன்றா? அதனால் தானே வீடணன் காலத்திலிருந்து, பிரகலாதன் காலத்திலிருந்து

www.thamizham.net - Free E book No 7502

'வையாபுரி'களும் மீனுக்கிகளும், மகாலிங்கங்களும், முத்தையாக்களும், சிவஞானங்களும், பக்தவத்சலங்களும், சுப்பிரமணியன்களும், கண்ணதாசன்களும், அடியார்களுமாக எத்தனைப் பேர் அவர்களுக்காகப் பரிந்து பேசி, செய்து, உயிர் வாழ்ந்தார்கள் — வாழ்கிறார்கள். இப்படி அறிவைப் பாராட்டுகிற செய்தி, ஒரு தாராள மனப்பாங்கு, பொது நோக்கு, நடுநிலைமை நம்மிடம் திருவள்ளுவர் காலத்திலிருந்து என்றேனும் இருந்ததுண்டா? இன்றேனும் இருக்கிறதா? ஒருவன் நம் கொள்கைக்கு ஏன்று வந்து கொடி தூக்கவில்லையானால், நமக்காகக் கத்தவில்லையானால், அவன் எவ்வளவு பெரிய அறிஞனாக, திறமையுள்ளவனாக, பொதுத் தொண்டனாக இருந்தாலும், நாம் அவனைத் திரும்பிப் பார்க்கிறோமா? அவன் அறிவைப் பாராட்டுகிறோமா? எத்துணைத் தன்னலம்! கஞ்சத்தனம்! பொறாமை! புகழ்க்காய்ச்சல்! அப்பப்பா! கொஞ்சமா நஞ்சமா? இப்படியிருந்தால் நாம் பார்ப்பன இனத்தைப்போல் எப்படி அறிவில் முன்னேற முடியும்? எப்படி நம் பெருமையை நம் உலகமெல்லாம் மதிக்கும்படி செய்து கொள்ள முடியும்? பார்ப்பனர் செய்கின்ற அறிவு முயற்சிகளில், அறிவை மதித்துச் செயல்படுகின்ற தன்மைகளில் நூற்றுக்கு ஒரு விழுக்காடேனும் நாம் செய்கின்றோமா? அவன் நடத்துகின்ற தினமணி, சுதேசமித்திரன், கல்கி, ஆனந்த விகடன், இதயம், துக்ளக், தினமணிக் கதிர், 'இந்து', 'எக்சுபிரசு', போன்ற நாளிதழ்கள் போல் ஒன்றையேனும் நம்மால் நடத்த முடிகிறதா? ஏன் முடியவில்லை? பணமில்லையா? நம்மிடம் இல்லாத பணமா? நம்மவர்களிடமில்லாத பணமா? கோடிக் கோடியாய்க் கோயில்களுக்கும் குட முழுக்குகளுக்கும் செலவிடவில்லையா? அவற்றைக் கொண்டு அவர்கள்தாமே பிழைக்கின்றனர்! இனி கோடிக் கோடியாய்ப் பணத்தைச் செலவிட்டுப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், மருத்துவமனைகளும் கட்டவில்லையா? அவற்றிலும் அவர்கள் தாமே படித்து முன்னுக்கு வருகின்றனர். செய்தித் தாள்கள் நாமுந்தாம் நடத்துகின்றோம், வெட்கங்கெட்டதனமாக! சாக்கடைப் பேச்சில், நரகல் செய்தியை எழுதும் தினத்தந்தி! சந்து பொந்துச் செய்திகளை விளம்பரப்படுத்தும் அலை ஓசை! மத எதிர்ப்புகளாலும், 'ஏ' பட்டி மன்றங்களாலும் இந்நாட்டு மக்களைக் கைதூக்கி விட்டு விட முடியும் என்று நம்புகின்ற விடுதலை! கழகச் செய்திகளையும் கலைஞர் எழுத்து பேச்சு இவற்றை மட்டும் பெரிதாக விளம்பரப் படுத்திக் கொள்ளும் முரசொலி! மற்றும் இன, மொழி, நலம் நாடாமல் பண நலமே குறிக்கோளாக உள்ள, விளம்பர அறிக்கைகள் போல், துண்டு துணுக்குகளாக வெளிவரும் நண்டு நறுக்குகள்! போதுமா. நூற்றுக்குத் தொண்ணூறு பேராகவுள்ள நம் தாழ்ச்சிகள், முயற்சிகள், தேவைகள், கருத்துகள், வரலாறுகள் — இன்ன இவற்றையெல்லாம் உலக முழுவதும் பறைசாற்ற! எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆயிரம் படிகள் அச்சிட்டுத் திரவிட எழுச்

www.thamizham.net - Free E book No 7502

சியை உண்டாக்கிப் போராட்டம் நடத்தி வெற்றி கொள்ளக் கனவு காணும் சின்னஞ்சிறு 'விடுதலே' என்னும் கலப்புத் தமிழ் இதழ் எங்கே! ஒரு சிறு செய்தியானாலும் பார்ப்பன இனத்துக்கு வந்த தெனில் அதை உடனுக்குடன் உலகமெலாம் பரப்பும் 'இந்து' என்னும் செவ்விய ஆங்கில நாளிதழ் எங்கே! போதுமா நமக்குள்ள போராட்டக் கருவிகள்? உண்மையாக எண்ணிப் பார்க்க வேண்டும்! மக்களை ஏமாற்றக் கூடாது.

இனி, அடுத்தபடி, பார்ப்பான் தன் வேதமதக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே ஏற்படுத்திக்கொண்ட சமசுக்கிருத மொழியை, அவன்தான் பெருமையுடனும், விடாப் பிடியாகவும் பயன்படுத்து கின்றானென்றால், 'பொது மக்களுக்குப் புரியுமென்று' நாமும் ஏன் அந்த மொழியில் எழுத வேண்டும்? பேச வேண்டும்? ஆங்கிலத்தில் பேசினாலே புரிந்து கொள்ளக்கூடிய தமிழர்கள், தங்கள் தாய்மொழி யாகிய தமிழில், தமிழ்நாட்டில், பேசினால் எழுதினால் புரியாது என்று சொன்னால் எங்கே போய், எதில் முட்டிக்கொள்வது? பின் எதற்குத்தான் தமிழ்மொழி. எல்லாரும் சமசுக்கிருதமோ, இந்தியோ இல்லை, ஆங்கிலமோ படித்துக் கொண்டால்தான் போகிறது! என்ன இழிவு! அவன் 'இயம்' வேண்டாமாம்; அவன் 'தேவ பாஷை'தான் வேண்டுமாம்! இஃது என்ன அறிவு! அல்லது கொடுமை! இப்படி ஓர் இனமா? இன மக்களா? தன் தாய்மொழி தேவையில்லை என்பது! பார்ப்பான் மொழியில் கருத்தைச் சொன்னால் தான் விளங்கும் என்பது! ஆனால் அவனையும் அவன் 'இயத்'தையும் வெறுப்பது! இஃது என்ன திரவிட இன முன்னேற்ற முயற்சி! தமிழின முன்னேற்ற முயற்சி! நாங்கள் அடித்துச் சொல்கிறோம், தமிழன் தன் சாதி வெறியை ஒழித்துக் கொள்ளாத வரை, தூய தமிழை வளர்க்காதவரை அவன் பார்ப்பனியத்துக்கு அடிமைப் பட்டுக் கிடப்பதை எவராலும் மீட்கவே முடியாது! பார்ப்பனியத்தை யும் ஒழிக்க முடியாது. ஏனெனில் பார்ப்பனியம் என்பது சாதிப் பிரிவுகளிலும், மொழிக்கலப்பிலும் கால் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு பூதம்! அதை வெருட்ட வேண்டுமானால், அல்லது ஒழிக்க வேண்டுமானால் நாம் அவற்றிலேயே வைத்துக் கொண்டிருக்கும் கால்களை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அந்த முயற்சி பயனளிக்காது. மலத்தில் கால் வைத்துக்கொண்டு சாணியைக் கழுவ முடியாது. இதை நம்மவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

சாதியொழித்திடல் ஒன்று - **நல்ல**
தமிழ் வளர்த்தல் மற்றொன்று!
பாதியை நாடு மறந்தால் — மற்ற
பாதி துலங்குவ தில்லை.

—பாரதிதாசன்

—பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7502

'ஆதி' - இஃது ஆதித் தமிழ்ச் சொல்லே!

—தமிழூர் ப. அருளி, புதுச்சேரி.

பழந்தமிழ்ச் சொல் வரிசையில் இதுவும் சேர்க்கப் பெறல் வேண்டும் என்னும் நயப்பாசையால் இக்கட்டுரை வலிந்து எழுதப் பெறுவதன்று; வெளிப்படையாகவும் தெளிவாகவும் வேரொழுங்கில் முறைப்பட மலர்ந்ததாகவும் இயல்பாய் இருக்க, கழக இலக்கியங்களில் அருகியும், வடமொழி வளவளப்பினில் பெருகியும் காண்குறும் நிலைகண்டார் — நடுநிலை நோக்கொடு வெளிப்படுத்துவது போலும், மொழியியல் கருத்தோட்ட வெளிப்பாடுகளில் மெய்யை ஒப்புவது போலும் எண்ணி, தவறிப்போய் மெய்ந்நிலையை நெகிழ்த்து விட்டமைமையைச் சுட்டி வரிசைப்படுத்தற்கெனவே சுருங்கி எழுந்துள்ளது இக் கட்டுரை.

சுட்டெழுத்துகள் மூன்று; அவை அ, இ, உ என்பன. இதை "உன்னிடல் அவ்வே இவ்வே உவ்வொடு மூன்றும் சுட்டாம்" (10 : 19 : 2) என சூடாமணி நிகண்டு சுட்டும். முதலெழுத்துகளில் (Phonemes) முதலில் தோன்றியது அகரமே. அகரத்தினும் முந்தித் தோன்றியது ஆகாரமே. மொழியொலித் தோற்ற அடிப்படைப்படி முதலில் புறம் வந்தன நெடில்களாகவே யிருந்திருத்தல் வேண்டுமென்பது மொழியியல் வல்லாரின் முற்றுங்கெய்திய முடிபு. அகரம் ஈரளபு இசைக்கப் பெற்ற நீளொலியே ஆகாரம். ஒலிப்பின் நீண் வெளிப்பாடு ஈரளபில் நிற்கையில் நெட்டெழுத்தாம். தொடக்க வாய்திறப்புகள் மிக மெல்லிதாய் அஃதாவது ஓரளபுடைத்தாய்த் தோன்றில. நெடுங்கணக்கு வாய்பாட்டு அமைதிக்கெனவும் வரி ஒழுங்கியலுக்கெனவும் ஆகாரத்தின் முன்மையில் அகரம் இடம் பெற்றதேயன்றி அகரவொலி முந்திப் புறத்தது என்பதாலன்று. உயிரொலித் தோற்ற முறைமையில் ஆ, ஈ, ஊ என்னும் சுட்டு நெட்டொலிகளில் சேய்மைச் சுட்டாகவே ஆகாரத்தை தமிழியல் வல்லார் மெய்ம்முடிபு சுட்டினர்.

அங்காப்பு (வாய்திறப்பு) முயல்வில், முதலில் அ, ஆ தோன்றினும் சுட்டுதற்கு - குறிப்பாகச் சேய்மை நிலையைச் சுட்ட ஆகாரமே முதற்கண் பயன் கூட்டியது என்பது, அது தொடர்ந்த சொல் வளர்ச்சி தெற்றெனக் காட்டும்.

அதி - 'மிகுதி" அதி + இகம் = அதிகம். அதிகம் — மிகுதி (திவா); பொலிவு (திவா) அதிகமான் (தொல். பொ. 62 உரை). அதிகன் - அதியமான் (புறம். 90) (சிறுபாண்: 103). அதிகாரம் - ஆட்சி, உரிமை, முறைமை. அதிகாரமுறை - நூற் பிரிவின் முறை வைப்பு. (தொல். பொரு. 666). அதிகாரி - உரிமையுள்ளவன், தகுதியுள்ளவன். அதிகாலை - விடியற்காலை முற்காலைப் பொழுது. அதிநுட்பம் - மிக நுண்ணியது (குறள்: 636). அதியமான் நெடு

www.thamizham.net - Free E book No 7502

மான் அஞ்சி - ஒரு கடை வள்ளல் (புறம்: 87). அதியர் - அதியமான் மரபினர் (புறம்: 91). அதியன் - மேம்பட்டவன். (தேவ. 485 : 4) அதிரல் - மிகுதியால் விதிரல், மனம் நடுங்குதல், எதிரொலித்தல் (பரிபா: 8 : 19). 'அதிர்வும் விதிர்வும் நடுக்கஞ் செய்யும்' (தொல். சொல்) அதிரு - (தெலு. அதுரு; கன். அதிர்; மலையா. அதிருக) அதிர்த்தல் - அதட்டுதல் (திவா). சொல்லுதல் (பிங்). அதிர்ச்சி - நடுங்குகை; ஆரவாரம் (திவா). அதிர்ப்பு - எதிரொலி. எதிர்குதிராயின் றதிர்ப்பு (பரிமா : 8 : 21) அதிர்வு - யாழ்நரம்பின் நடுக்கம். செம்பகை யார்ப்பே அதிர்வே கூடம் (சிலம். 8 : 29).

அதி - அதி + அம் = அதியம் - அதம் அதம் - மிகுதி,பெருமை, கூட்டம். அதட்டல் - உரத்த சொல்லால் வெருட்டுதல். அதம் + கோடு + ஆசான் = அதங்கோட்டாசான். அதங்கோட்டாசாற் - கரில்தபத் தெரித்து (தொல் சிறப்புப்). அதங்கோடு - மிகப் பெரும் மலை. அதைத்தல் - வீங்குதல், செருக்குதல். அதைப்பு - வீக்கம்.

அதப்பு - திமிர், அதனம் - மிகுதி

அதி - அதள். அதள் - தோல், உடம்பின் மேந்தோன்றித் தெரிதலின் தோல் 'அதள்' எனப் பெற்றது. 'அதளோன் றுஞ்சுங் காப்பின்" (பெரும்பாண். 151). மரப்பட்டை (தைலவ). அதள்புனையரணம் - தோற்கைத்தளமென்னுங் கருவி. (சிலம்பு : 14 : 170).

அதி - அதம். அதம் - அத்தி மரம் (சூடா). அதவு - அத்தி (கல்லாட. 95 : 18) 'அதவத் தீங்கனியன்ன'. (அகம்). அதவம் - வெண்கோட்டதவத் தெழுகுளிறு மிதித்தவொரு பழம் (24 : குறுந்). 'அதவுடன் உதும்பரங்கள் கோளியே யதமே அத்தி' (சூடா. நிக. 4 : 18 : 1)

அதி - அத்தி. பெரிய மரம் என்னும் பொதுப் பொருளான சொல் சிறப்பாக அத்தி மரத்தைக் குறித்து நிலைப்பெய்தியமைந்தது. 'அதி' என்னும் முதனிலை வேரினின்றே அதம், அதவு, அதவம் எனும் சொற்கள் வளர்ந்து அதிகரித்து நின்று அதை மெய்ப்பிப்பனவாயுள்ளன. (தெலு. அத்தி; கன். அத்தி; மலையா. அத்தி) துளு - அர்த்தி ; ஒ. நோ. கத்தரி - கர்த்தரி (வ).

அத்தி - ஆத்தி (காண்க : ஆத்திச்சூடி. ஆத்தி மாலையைச் சூடியவனுகக் கொள்ளப் பெற்ற சிவன். அதி எனும் மிகுதிப் பொருளையுணர்த்தும் முதனிலை வேர் வழியே அத்தி எனும் சொல்லும் தோன்றியது. அந்நிலைப் பொருள் வழிப்படியே மிகுதல், கூடுதல் பொருள்களைக் கப்பிய 'ஆர்' என்னும் முதனிலைச் சொல்லும் அத்தி மரத்தைக் குறிப்பதைக் கண்டுவக்க.

"வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்" (புறம் : 338 : 7)

www.thamizham.net - Free E book No 7502

(உரை : வேப்ப மாலையும் 'ஆத்தி' மாலையும் பனந்தோட்டு மாலையும் ஆகிய மூன்றையுஞ் சூடிய தலையை உடையராய், வரிந்து கட்டப்பெற்ற வில்லை உடையவராய் ..)

சாரியைகளுள் ஒன்றான 'அத்து' என்பதுவும் மிகுதி, கூடல் ஆகிய கருத்துகளை உள்ளடக்கியதே.

அதி - அத்து - நெடியவழி; எல்லை. (அவன் அத்து மீறி நடக்கமாட்டான். உ. வ). அத்து - அத்தம் - வழி (பிங்) அருநெறி. ஆளிலத்தமாகிய காடே (புறம் : 23) அத்தஞ் செல்வோரலறத் தாக்கி (39. பெரும்பா). சிறப்பாகக், காட்டு வழியையே பின் குறிக்கலாயிற்று. அத்தமார் அழுவம் நத்துறந் தருளார் (அகம் : 183 : 3) உரை : அத்தம் - கடத்தற்கரிய வழி வேனில் அத்தத் தாங்கண் (185 : 9. அகம்) உரை : வேனிற் பருவத்தே கடத்தற்கரிய 'வழி' யாகிய அவ்விடத்தே. அத்தப் பாதிரி (191 : 1: அகம்) உரை : செல்லுகின்ற பாலைநிலத்து வழியில் நிற்கின்ற பாதிரி. வெவ்வரை அத்தஞ் சுட்டி (1 : 89; 6 : 7 அகம்)

அத்து - அதர். அதர் - பெருவழி, வழி. அதர்கோள் - வழிப் பறி. (திவா). காலதர் - காற்று உட்புகவும் வெளிவரவுமான காப் படைட்பு. ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் (குறள் : 594). அதர் சாத்து எறிந்து கூட்டு உண்ணும் (167 : 8. அகம்) களிறு வழங் கதர் கானத் தல்கி (50 : பொருநரா.) மானடி பொறித்த மயங்கதர் மருங்கின் (106 : பெரும்பாண்) (நச். உரை : நீரின்மையின் மயங்கித் திரியும் மானடி அழுந்திக் கிடக்கின்ற 'வழி'யிடத்தில்...)

அதர் - வழி. நன்னிலை பொறித்த கன்னிலை யதர (179 : 8 அகம்) உரை : பெயரும் பீடுமாகிய நல்ல நிலைகளைப் பொறித்து நடப்பெற்ற கற்கள் நிலையுதலையுடைய 'வழி'யையுடைய. வழிப் பொருளைத் தரும் 'அதர்' எனும் சொல்லினின்றே வடமொழியாளர் சற்றே திரித்து அதர் - 'அதர' என வாயிதழைக் குறிக்கப் பயன் படுத்தலாயினர். வழியைக் குறித்த வாய் எனுஞ் சொல்லே முகத் தின்கண் விளங்கும் பெருவழிக்கும் அமைந்த வாய் நிலையை உன்னுக. அதரிடைச் செலவு - வீரர் நிறை மீட்சிக்குப் புறப்படும் புறத்துறை (புற. வெண். 2 : 3).

அத்தம் என வழியைக் குறித்த தூய தென் சொல்லை, வடவர் "அத்துவா" எனத் திரித்தொலித்தனர். அத்துவா. (வ. சொ) மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்து வாத்துவா, கலாத்துவா எனும் ஆறும் ஆதன் (Soul) சிவனியத்தை அணுக வழி முறைகளென வேறு மெய்மப் பொய்ப்பைப் பின் பாடினர்.

www.thamizham.net - Free E book No 7502

அதி - அதன் - அத்தன் - அந்தன் - பெரியவன், தலைவன். அத்தன் என்பதன் விளி அத்தான். அத்தன் - (பெ. பா) அத்தை. அத்தன் - அத்தள் - ஆத்தாள் - தலைவி. (பெ. பா. பெ) அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி (தனிப்பா. 1 : 35 : 66).

அதன் - ஆதன். இது பழைய காலத்து மக்கட் பெயர் வகையில் பெருவழக்காயிருந்தது. (தொல். எழுத். 348). கிருத்துவ மறைகளில் பயிலப் பெறும் 'ஆதாம்' எனும் பெயரிய படைப்பு இத்துடன் ஆயத்தக்கது. (L. Adamus - Adam (Eng.)

ஆதன் - புலம்பன். (Soul). 'நெடுவேள் ஆதன் போந்தை யன்ன' (338 : 4. புறம்) (உரை : நெடுவேள் ஆதன் என்பதானது போத்தை யென்னும் ஊரைப் போன்ற –). இவன் 'நெடுவேள் ஆவி' என அகம் - 1-இல் சிறப்பிக்கப் பெறுதலைக் காண்க. ஆதன் - ஆவி)

சேரலாதன், நெடுஞ்சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரமான் சிக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பன போலும் நீள் பெயர்களின் ஈற்றுநிலையாகிய 'ஆதன்' எனும் பெயர், அக்கால மக்களிடைப் பெருவழக்காயிருந்தமையைச் சுட்டவல்லன. ஆதன் என்னும் வழியமைவிலேயே வடமொழியாளர் கதிரவனைக் குறிக்க ஆதவ, ஆதித்ய போலும் சொற்களைத் திரித்துருவாக்கிப் பயன்படுத்தித் தம்மைப்படுத்திக் கொண்டனர். (வட) ஆதித்ய மண்டல். (கதிரவ மண்டிலம்).

ஆதன் + தந்தை—ஆந்தை (தொல்.) ஒ. நோ : பிசிர் ஆந்தையார், அஞ்சில்ஆந்தையார். (ஆதன் + பாக்கம் = ஆதம்பாக்கம்.)

அதி - ஆதி : தொன்மை, முதன்மை, முதல், வேர், பழமை, கரணியம், குதிரையின் நெடிய ஓட்டம் (நேரோடல்), பழம் பெருந் தாள வகை, இறைவன்.
ஆதி - தொடக்கம் (திருவா. 7-1) கடவுள் (பிங்)

ஆதி - குதிரையின் நேரோடல். முன்மைத் தாயும் விரைந்தும் நேராயும் ஓடும் நெட்டோட்டம் 'ஆதி போகல்' எனப் பெற்றது. அரிபெய் புட்டி லார்ப்ப பரிசிறந்து ஆதி போகிய பாய்வரி நன்மா (அகம் 122, 19, 20). அடிமண்டிலத்து ஆதிபோகிய (மதுரைக். 390)

அதி - அத்தி - ஒரு சேரன் பெயர். (அகம். 222, 236, 396, 397). பால்வேறுபாட்டின் வழி பெயரீறு வகுக்காமலேயே பொதுப் படச் சுட்டும் வழக்கிருந்த காலத்திலேயே இகரவீறு ஆண், பெண், ஒன்றன்பால் ஆகிய அனைத்துக்கும் பயன்பெற்றது. இன்றும் மலையாளி, முதலாளி, படகோட்டி என்பவற்றிற் காண்க.

www.thamizham.net - Free E book No 7502

ஆடற்கலைக்கு ஏற்றந் தந்தவனைக் கருதப் பெற்ற அத்தி என்னும் பெயரிய சேரனொருவன் ஆட்டனத்தி (ஆட்டன் + அத்தி) எனப் பெற்றான். அவனின் மனையாட்டி ஆதிமந்தி. இவள் கரிகால் வளவனின் மகள். 'ஆதிமந்தி காதலற் காட்டி' (222. அகம்) கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த ஆதிமந்தி (236 அகம்) மந்தி பனிபொர் கண்ணள் பலபுலந்துறைய (376 அகம்) ஆதிமந்தி பேதுற்றினைய (76 அகம்). மேற்கூறிய அகப்பாட்டு வரிகள் யாவும் பரணரால் புறம் பெயர்ந்தனவாகும். அத்திக்கு எவ்வாறு 'ஆட்டன்' அடையெடுத்ததோ, அவ்வாறே மந்திக்கும் 'ஆதி' அடையெடுத்து முன்னின்றது என்பது 396-ஆம் பாடல் வழி புலனாகின்றது. மந்தி—மன் + தி = மந்தி ஒ. நோ : மன் + திரம் = மந்திரம். மன் - கருதும் ஆற்றலுள்ள மாந்தன். தி - பெண்பாலீறு. ஒ நோ : ஆள் + தி = ஆட்டி. மாள் + தி = மாட்டி. (திருவாட்டி. பெருமாட்டி). ஆதிமந்தியின் பெயரில் வரும் அடையாகிய 'ஆதி,'—ஆதன் என்பதன் பெண்பால் வடிவமே.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்னும் திருக்குறளின்

முதற்குறளின் முதலடியில் வந்துள்ள ஆதி எனும் தூய தென்றமிழ்ச் சொல், பகவன் என்பதன் முன் சிறப்படையாக நின்று பெருமையும் உயர்வும் முன்மையும் தொன்மையும் தலைமைச் சிறப்பும் பொருந்திய இறைவன் என்னும் பொருள் திணுக்கத்திற்கு வழி கூட்டியது. ஆதன் என்பதன் பெண்பால் வடிவம் ஆதி என்பதுணர்ந்த சில பழவுரையாசிரியன்மார் வள்ளுவப் பெருந்தகையின் அன்னையராகவும் ஊகித்துப் பொய்த்தனர். அம்மையப்பன் போலும் ஆதிபகவன் என அவர்கள் பொருள் வலித்தும் எண்ணியிருக்கக் கூடும். தலை சிறந்தார் முனைவர் என அழைக்கப்பெறும் தொல்காப்பிய வழக்கை (வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்...(தொல்; 1594) ஒப்பு நோக்கினும் ஆதி என்பதன் முன்மைக் கருத்து உண்மையுரைப் பொருத்தம் தெளிவாகும். அதே திருக்குறளில்

"அந்தணர் நூற்கு மறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (குறள் 543) என வரும்

ஆதி எனும் சொல்லுக்கு,—'அடிப்படைக்களனாய், மூலமாய், காரணியமாய், தொடக்கமாய்' என்றவாறே, பொருள் கொள்ள வழியுள்ளமையையும் ஒப்பியுணர்க.

சில்லிடங்களிலேயே பயிலப் பெற்று, இலக்கிய வழக்கில் நிரம்பிய ஆட்சி பெறாத ஒரே காரணியங் காட்டிக்கொண்டு நெறியான வேரில் ஆதியே தோன்றிய இச் சொல் வடமொழி அகராதிகளிலும் மறைகளிலும் வெளிப்பிதுங்கி உள்ளமையை ஏற்றுத் தமிழ்ச் சொல் அன்று எனத் தவிர்த்தல் பொறுக்கொணாததும் மெய்மைக்கு எதிரானதுமாகும். 0

www.thamizham.net - Free E book No 7502

செய்திகள்

1. தமிழ் காவற்குழு, புதுச்சேரி, கடந்த 29-6-80 மாலை 6 மணியளவில், வாணி நிலையத்தில், ஆட்சிமொழி ஆண்டு விழா நடத்தியது. புலவர். திரு. இரா. திருமுருகனார், க. மு. தலைமை தாங்கினார். திருவாளர்கள் நா. மணிமாறன், பேரா. ம. இலெ. தங்கப்பா, க. மு. ஆகியோர் உரையாற்றினர். விழாவில் 'புதுச்சேரியா பாண்டிச்சேரியா' என்ற நூல் வெளியிடப் பெற்றது. தொடக்கத்தில் புலவர். வே. முத்துக்குமாரசாமி, க. மு. வரவேற்புரையும், இறுதியில் பாவலர். இலக்கியன் நன்றியுரையும் கூறினர்.

2. கோவை, பகுத்தறிவாளர் கழகம், சிந்தனைப் பேரவை சார்பாக, சென்ற 27-7-80-இல் வடகோவை, கல்வியகத்தில் சிறப்புக் கருத்தரங்கம் ஒன்று நடந்தது. திரு. கு. ச. ஆனந்தம் வணி இ; ச. இ, 'இந்திய ஆட்சிமொழி - சிக்கலும் தீர்வும்' என்ற தலைப்பிலும். திருச்சி வே. ஆனைமுத்து 'பெரியாரியம் - மார்க்கசியத்திற்கு முரணானதா' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

3. சாதி யுணர்வை வளர்த்து வரும் தினமணிக் கதிரின் திமிரான போக்கைக் கண்டித்துப் பல தென்மொழி அன்பர்களும் மன்றங்களும் அமைப்புகளும் அவ்விதழாசிரியருக்கு மடல்களும் தீர்மானங்கள் நிறைவேற்றியும் அனுப்பியுள்ளனர். இட நெருக்கடியால் அவை பற்றிச் செய்தி வெளியிட வியலவில்லை. அனைவர் முயற்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

4. நெய்வேலி - இசைச் சொற்பொழிவு : பண்ணாய்வாளர் திரு. **குடந்தை சுந்தரேசனார்,** நெய்வேலி சவகர் மேனிலைப் பள்ளியில் மாணாக்கர்கட்குப் பிற்பகலில் தமிழ் மரபிசையின் இனிமை குறித்து, ஐந்து திணைப்பண்களையும் பாடி விளக்கி, அரியதோர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்று முன்னிரவில் உலகமதி இல்லத்தில் பாவாணர் தமிழ்க் குடும்பச் சார்பாக திரு. சுந்தரேசனார்க்கு விருந்தும் அன்பளிப்பும் தரப்பெற்றன.

5. மலேசியா, ஈப்போவில், சாலான் அம்பாங், பிலால் உணவகத்தில் கடந்த 3-8-80 மாலை, பாவலர் **எல்லோன்** அவர்களின், **முத்தாரம்** என்னும் பாடல் தொகுப்பு நூல் வெளியிடப் பெற்றது. நிகழ்ச்சிக்கு மலாயா பல்கலைக் கழகப் பேரா. பர். இரா. தண்டாயுதம் க. மு. அவர்கள் தலைமை தாங்க, மலேசிய வானொலியைச் சார்ந்த திரு. வி. பூபாலன் க. இ. (மே) அவர்கள் நூலை வெளியிட்டார். நூல் வெளியீடு சார்பாகத் **தென்மொழி** வளர்ச்சிக்கு உருபா 72/- நன்கொடையாக அனுப்பப் பெற்றது. அன்பளிப்புக்

www.thamizham.net - Free E book No 7502

குத் தென்மொழி நெஞ்சு நிறைந்த நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

நன்கொடைகள்

1) கோவை, இரணியன் தென்மொழி வளர்ச்சிக்காகத் திங்கள் தோறும் அன்பளிப்பு விடுப்பதெனத் தெரிவித்து, மே, சூன், சூலை, ஆகத்து மாதங்களுக்கென விடுத்த நன்கொடை உரு. 40-ஐ மிக்க நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். அவர் பொதுவுணர்வை மிகவும் பாராட்டுகிறோம்.

2) தஞ்சை மாவட்டம் பூந்தோட்டம் அரசினர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர். நா. தண்டபாணி அவர் துணைவியார் தமிழரசி அவர்களின் குழந்தை கனிமொழியின் ஓராண்டு நினைவாகத் தென்மொழிக்கு விடுத்த உரு. 10 அன்பளிப்பை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். குழந்தை கனிமொழி எல்லா நலன்களும் பெற்று இனிதே வாழ, தென்மொழி அன்புடன் வாழ்த்துகிறது

3) மலேசியா தென்மொழி அன்பர் எம். குருசாமி அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்காகத் தம் பங்காக உரு. 20, தம் உடனுறை நண்பர்கள் கே. காளிமுத்து, எசு. சின்னசாமி ஆகியோரின் பங்காக முறையே உரு. 45 உரு. 20 ஆகிய தொகைகள் 2-7-80-இல் வரப் பெற்றோம். தமிழுள்ளம் கொண்ட அவர்களுக்குத் தென்மொழி தன் நன்றியை உளமாரத் தெரிவித்துக் கொள்கிறது.

4) படைத் துறையைச் சார்ந்த மேகாலயா சாம்பசிவம் அவர்கள் 3-7-80 அன்று உரு. ஐந்தும், 4-8-80 அன்று உரு ஐந்தும், வி. சு. பிள்ளை அவர்கள் 14-7-80 அன்று உருபா ஐந்தும் அன்பளிப்பாக வரப்பெற்றோம். அன்புள்ளங்களுக்கு நன்றி.

5) சென்னை 'அசோக் இலேலண்'டில் பணியாற்றும் திருவொற்றியூர் தென்மொழி அன்பர் துரை. சண்முகசுந்தரம் தம் பணியுயர்வு நினைவாக 2-7-80 அன்று, தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 10 அன்பளிப்புச் செய்தார். அவர்க்கு எங்கள் அன்புகலந்த நன்றி.

6) சேலம்-6, தாதகாப்பட்டி மு. பழ. சதாசிவம் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்காகத் தம் பங்காக 4-8-80-இல் விடுத்த உரு. 5-ஐ பெற்றுக் கொண்டோம். அவர்க்குத் தென்மொழி தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

7) தென்மொழி அன்பரும், சேலம்-1 மு. காளி அவர்கள் தம்பியின் மகனும் ஆகிய திரு- முந்து அண்ணாமலை அவர்கள் **செல்வி மாலினியை** வெங்காலூரில் 21-8-80-இல் இல்வாழ்க்கை துணைவியாகக்கொண்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 55-ஐ

www.thamizham.net - Free E book No 7502

நன்கொடையாகக் கொடுத்தார். தென்மொழி மணமக்கள் எல்லா நலன்களும் வளங்களும் பெற்று இனிதே வாழ நிறைந்த நெஞ்சுடன்வாழ்த்துகிறது.

செய்தி—திருத்தம்

சு: 16, ஓ. 11 இதழில் 'நன்கொடைகள்' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்த 5-ஆவது செய்தியில் 'கோ. கண்ணன் - தயாளு ஆகியோரின் திருமண நினைவாக' என்றிருப்பதை 'திரு. கே கண்ணன் - தயாளு இவர்களின் மகளிர் **தமிழரசி - பண்ணரசி** ஆகியோர் திருமண நினைவாக' என்று திருத்திக் கொள்க. பிழைக்கு வருந்துகிறோம்.

நடுவணரசுக்கும் இலக்கியக் கழகத்திற்கும் வேண்டுகோள்

—தி. நா. அறிவுஒளி, க. மு.

தில்லி நடுவணரசின் பொருளீட்டின் துணை கொண்டியங்கும் இலக்கியக் கழகம் (சாகித்திய அக்காதெமி) இந்திய மொழிகளின் இலக்கியங்களை அறிமுகப்படுத்து முகமாகப பல்லாண்டுகளாக **'இந்திய இலக்கியம்'** (Indian Literature) என்னும் திங்களிரிதழினை ஆங்கில மொழியிலும் வடமொழியிலும் வெளியிட்டு வருகின்றது. வடமொழியில் இவ்விதழ் வெளிவருவது ஏனோ புரியவில்லை! எத்தனை கோடி மக்கள் அம்மொழியில் இவ்விதழைப் படித்துப் பயன்பெறுவாரோ; யாமறியோம். அது கிடக்க,

நந்தமிழ் மொழியில் அவ்விதழினை வெளியிட வேண்டுமெனத் தமிழ் அமைப்புகள் தீர்மானமியற்றி நடுவணரசு, தமிழக அரசு இலக்கியக் கழகம் (சாகித்திய அக்காதெமி) ஆகியவற்றிற்கு அறிவுறுத்துதல் வேண்டும். தமிழக அரசும் நடுவணரசுக் கல்வியமைச்சகத்திற்கு இது குறித்து அறிவுறுத்தித் தமிழ் இதழ் வெளிவர ஆவன செயல் வேண்டும். வடமொழிக்குத் தாயாம் தன்மையமைந்த வண்டமிழில் 'இந்திய இலக்கியம்' வெளிவருவதன்றோ தக்கது! இந்திய ஒருமைப்பாய் வாய் கிழிய ஒலிப்போர் அறிவில் இனைய நன்னோக்கு மலரவில்லையே! தமிழார்வலர் தனித்த முறையிலும் நடுவணரசுக்கும்—தமிழக அரசுக்கும்—அறிவுறுத்துதல் வேண்டும். தமிழகத்து அனைத்துக் கட்சிகளும் இதனை வற்புறுத்த வேண்டுமன்றோ? நம் வரிப் பணத்தில் அமைந்தது இலக்கியக் கழகம். நாம் அதன் பயனைத் தமிழில் பெற உரிமை உடையோம். ஆகவே இவ் வேண்டுகோளை விட வேண்டியுள்ளது. தமிழினமே! உரிமைகளைத் தட்டிக் கேட்கப் பின்னிடாதே! O

www.thamizham.net - Free E book No 7502

தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்புகள்

—இரா. மதிவாணன், க. மு.

அகவாழ்வில் திணை துறை பாகுபாடு ஏன்?

உலக மொழிகளில் எண்ணிறந்த இலக்கியச் செல்வங்கள் உள்ளன. காதல் வாழ்வாகிய அகப்பொருள் இலக்கியங்களுக்குத் திணையும் துறையும் வகுத்துக் கூறுவது தமிழ்மொழி ஒன்றில் மட்டும் சிறப்பாகக் காணப்படுகிறது.

பாவியமாக வடிக்கப்படாததும் கதையோடு தொடர்புபடுத்தப் படாததுமாகிய தனிப்பாடல்கள் அகப்பொருள் தழுவி வரும்போது அதை நாடக உறுப்பாக்கிக் காட்ட திணை துறை பாகுபாடு தேவைப்படுகிறது. திணை துறை வகுக்கப்பட்ட ஒவ்வொரு அகப் பாட்டும் ஒவ்வொரு நாடகக் காட்சியாக நம் கண்முன் வந்து நிற்கிறது.

ஊடலும் கூடலும், 'வாழ்வும் பிரிவும்', 'இரங்கலும் ஏக்கமும்' முன்னிகழ்ச்சிகளால் உணர்வூட்டம் பெற்றவை. அத்தகைய உணர் வோட்டங்களே திணை; கருத்தோட்டங்களே துறை எனப்படும். மாந்தனை ஆட்டிப் படைக்கும் அகவுணர்வுகள் அவன் வாழும் சூழ லால் வடிவம் பெறுகின்றன. அச்சூழலை உருவாக்குவன அவன் வாழும் நிலமும் காலமும்; நிலமும் காலமும் அவனால் கட்டுப்படுத்த முடியாதவையாதலின் முதற்பொருள் எனப்படும். அவனைச் சூழ் வுள்ள ஓரறிவுயிர் முதல் ஆறறிவு உயிர் வரையுள்ள சூழலை ஓரள வுக்கு அவன் கட்டுப்படுத்தலாம். இறை முதற்பொருளில் கருக் கொண்டெழுந்ததால் கருப்பொருள் எனப்படும்.

திணை என்னும் சொல்லுக்கு ஒழுங்கு என்று பொருள். குறித்த வரையறையுடைய (முதற்பொருளும் கருப்பொருளும்) நிலப்பகுதி யில் குறிப்பிட்ட ஒழுங்கில் பழகி விட்ட மனநிலை உரிப்பொருள் எனப்படும். முதற்பொருளும் கருப்பொருளுமாகிய நில அமைதியும் உரிப்பொருளாகிய மக்களின் உணர்வு அமைதியும் திணை எனப் படும். நில இயல்புக்கேற்ப வேறுபடும் வாழ்வியல் அமைப்புகளை **ecological taxonomy** என்பர்.

முல்லை நிலத்தில் வாழ்பவனுக்கு ஆனிரைகளையும் கன்றுகளை யும் காணும்போது இல்லிருந்து மக்களொடு மகிழ்ந்து வாழும் ஆசையும், பாலைநிலத்தில் வாழ்பவனுக்குக் கொள்ளையடித்துக் கொலை புரியும் உணர்வும், சூழலால் தானாகவே உள்ளத்தில் உரம் பெற்று வளரும். இதனை மேனாட்டார் **environmental Psychology** என்பர். ஒருவனுக்கு நல்ல சூழலை அமைத்துத் தராமல் அவனை

www.thamizham.net - Free E book No 7502

நல்லவனுக்க முடியாது. இத்தகைய சூழலில் பிறந்து வளர்ந்தவனின் மனநிலை இப்படித்தானிருக்கும் என்று காட்டுவது திணை.

நல்ல சூழலில் வளர்ந்து மனவளம் பெற்றவர்கள் வேறு எந்தச் சூழலுக்குச் சென்றாலும் நல்ல சூழலையே உண்டாக்க முயல்வர். தீய சூழலில் பழகி மனவளம் இழந்த கொடியவர்கள் எந்த நிலத்திற்குச் சென்றாலும் அதே தீய சூழலை உண்டாக்க முயல்வர். இவ்விரு திறத்தார்க்கும் ஏற்படும் கருத்து மோதலே அகவாழ்விலும் புறவாழ்விலும் காணப்படும் துறைகள். நல்லவர்கள் நல்லவரையே எதிர் கொள்ளும்போது ஏற்படும் காதல், கருத்தோட்டங்களே அன்பின் ஐந்திணைக்குரிய அகத்துறைகள்.

ஊடல், பிரிவு, இரங்கல் என்னும் உணர்வுகளின் கருத்து ஒன்றாயினும் அவற்றை வெளிப்படுத்தும் பாங்கால் சுவை மிகுதியாகிறது. கேட்போரின் உள்ளத்தை நெகிழ்விக்கும் திறனுடையதாகிறது. குறிப்பிட்ட துறையில் நெஞ்சு நெகிழ்விக்கும் அளவுக்குத் தம் கருத்தைச் சுவைபடப் புலப்படுத்தும் திறன் பெரும் புலவர்க்கே வாய்க்கும். காதல் வாழ்வில் இனிமை மிக வேண்டுமாயின், ஆணாயினும் பெண்ணாயினும் தன் கருத்தைச் சுவைபட மனத்தைத் தொடுமாறு எடுத்துரைக்கும் ஆற்றல்பெற வேண்டும் என்பதே துறை வகுப்பதன் நோக்கம்.

காதலுணர்வின் விளைநிலமான உள்ளத்தைப் பண்படுத்த திணை துறைவழிக்கூற்றுகள் பயன்படுகின்றன. திணை உணர்வு ஒரு காட்டாற்று வெள்ளம்; துறை என்பது அக்காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் மடை. செங்கடுமொழி என்னும் துறை இதனை நன்கு விளக்கும். அகவாழ்வை வெறும் விலங்கின் கூடுதலைப்போல் கருதினால் இதன் அருமையை உணர முடியாது. உணர்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தெரியாதவர்களின் அகவாழ்க்கை இரங்கத்தக்கதாகும். துறையில் வற்புறுத்தப்படும் கருத்தோட்டங்கள் உணர்வோட்டங்களை ஒழுங்குபடுத்தி அகவாழ்வில் உண்மையான இயற்கை இன்பத்தைப் பெறச் செய்கிறது.

குறிஞ்சித்திணையில் கண்ணும் மனமும் உவக்க ஒன்று கூடுகின்றனர். கைப்பிடித்தவன் பாலைத்திணையில் கண்கலங்கப் பிரிகிறான் மருதத்திணையில் அவள் மனங்கலங்கி ஊடுகிறாள். நெய்தலில் கண்ணும் மனமும் அலமற ஏங்குகின்றனர். இதுதான் உலக வாழ்வு என்பதை ஐந்திணைப் பிரிவுகள் நன்குணர்த்தி, இன்பதுன்பங்களில் சரிசமமாகத் தம்மைக் காத்துக் கொள்ளத்தக்க கருத்தோட்டங்களைத் துறைப்பிரிவுகள் வாரி வழங்குகின்றன.

ஆங்கிலம் போன்ற வளமான மொழிகளில் திணை, துறை குறிக்கப்படாததால் அந்த அகப்பாடல்கள் குறித்த உணர்வை அல்லது

www.thamizham.net - Free E book No 7502

கருத்தைச் சுவைப்பட எடுத்துக் காட்டவில்லையா என்று வினவக் கூடும். சில அவலச் சுவையுள்ள ஆங்கிலப் பாடலைக் கேட்டு உருகாதார் இல்லை என்பது உண்மையே. உணர்வை வெளிப்படக் கொட்டிக் கருத்தைக் கவரும் பாடல், உணர்வைக் குறிப்பாக வெளிப்படுத்தி உவமை, உள்ளுறை உவமை, இறைச்சிப் பொருள் போன்ற அணிவகைகளால் கருத்தை விளக்கும் பாடல் எனப் பாடல்களை இருவகைப்படுத்தலாம். முன்பு கூறிய ஆங்கிலப் பாடல் முதல் வகையைச் சார்ந்தது. பிரிவுக்குப் பொறுப்பானவர் இருவருமா, ஒருவரா. ஒருவரும் பொறுப்பில்லாமல் புறச்சூழலால் ஏற்பட்டதா என்பதை அப்பாடலிலிருந்து நம்மால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. திணை—நெய்தல்; துறை — இகந்தமை சாற்றி இரங்கல் என்று துறை பிரிக்கப்பட்டிருந்தால் பிரிவுக்குப் பிரிந்தவரே பொறுப்பு என உணர முடிகிறது. துறை —பரிவுற்று மெலிதல் என்றால் இருவரிடமும் தவறில்லை, வேறு யாராலோ பிரிந்தனர் என உணர முடியும். துறை — தன்மனத்தழுங்கல் என்றால் யாரோ ஒருவரிடம் முன் செய்த குற்றவுணர்வு உள்ளது என உணர முடிகிறது. பாடலில் வருத்த உணர்வு சுவைபட வண்ணிக்கப்படுமே ஒழிய காரணம் விளக்கப்படாது. அதனைத் துறை பாகுபாடுதான் விளக்கிக் காட்டும்.

இனி, இரண்டாம் வகைப் பாடலான குறிப்பால் உணர்த்தும் அணிவகைப் பாடலுக்குத் திணை துறை பிரிக்கப்படாவிடின் ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது.

> 'தேனீக்கள் தாமரை மலரைச் சூழ்ந்துள்ளன
> இக்காட்சி, திருமகளின் கழுத்தில்
> வயிரமாலை இட்டது போன்றுள்ளது

இதனைத் திணை துறையோடு பொருத்திப் பார்க்காவிட்டால் வெறும் இயற்கை வண்ணனை குறித்த பாடலாகத்தான் தெரியும்.

உயர்குடியில் பிறந்தவர்களும் பண்பால் மேம்பட்டவர்களும், வெளிப்படச் சுருக்கென்று ஒன்றைச் சொன்னால் மனம் நோகும் என எண்ணிக் குறிப்பாக, உவமை வாயிலாகத் தம் கருத்தை வெளிப்படுத்துவது மரபு. இப்பாடலுக்கு திணை—குறிஞ்சி துறை—வரைவு கடாதல்; என்று திணை துறை வகுக்கும்போது இதில் குறிப்பாகக் கூறப்படும் கருத்து தெளிவாகப் புரிகிறது. இது தோழி தலைமகனைப் பார்த்துச் சொல்வது. இவளைக் காதலித்து நீ இன்னும் மணம் புரிந்து கொள்ளாமல் காலம் நீடிக்கிறாய். இதோ பார்! தாமரை மலரைச் சூழ்ந்துள்ள வண்டுகளின் வரிசை 'மங்கலமகளின் கழுத்தில் இடப்பட்ட மங்கலநாணை (தாலி)ப் போன்றில்லையா? இதைக் கண்டாயினும் இவள் கழுத்தில் தாலிகட்டும் நினைவு உனக்குத் தோன்றவில்லையா' என்று நேருக்கு நேர் கடுமையாகப் பேச

www.thamizham.net - Free E book No 7502

வேண்டிய சொற்கள் வெறும் உவமையை மட்டும் சுட்டிக்காட்டி வாயுள்ள ஊமையாக நிற்கிறது. எனவே, உயர்ந்த நாகரிகத்தை கொண்டு நிற்கும் உரையாடல்களின் வடிவான இத்தகைய அகப் பாடல்களுக்குத் திணை துறை வகுக்கப்படாவிடின் அகப்பாடலின் உயர்ந்த சுவையையும் இழந்துவிடுவோம்; கருத்தையும் மறந்து விடுவோம்.

துறை என்பது பண்பாட்டு அளவுமானி.

பல்வேறு படித்தரத்திலுள்ள மாந்தரின் மனவுணர்வுகளை வகைப்படுத்தி அவரவர்களின் மனவளத்தை அளந்து காட்டும் அளவுமானியாக 'துறை' செயல்படுகிறது. ஊடல் உணர்வுகளைப் பல்லாயிரம் வகைகளில் வடித்துக் காட்டலாம். ஊடலுணர்வின் தரமான வெளிப்பாடாக நிற்கும் பாடல்கள் காலங்கடந்து நிற்கும் புகழ்பெற்றுவிடும். ஒரு பெண் ஊடலின்போது,கணவனைக் கண்டபடி வைது விடுகிறாள். 'அவர் கதைப் பொத்திக் கொண்டு போய் விட்டார். நான் கதவைச் சாத்திக் கொண்டு அழுகிறேன்' என் கிறாள். அவளுடைய மனவளம் அவ்வளவுதான். மற்றோர் உயர் பண்பு நிறைந்த பெண்ணின் ஊடலைக் காண்போம். கணவனின் கொடுமையால் கடுஞ்சினம் பொங்கியபோதும் ஒன்றும் பேசாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாளாம் ஏன் நீ ஒன்றுமே பேச வில்லை என்று தோழி கேட்டபோது, "எடைக் கற்களை அதிகமாகப் போட்டால் எடையிடப்படும் தவசத்தின் எடை மிகக் குறைந்து போய்விடும். உயர்குடிப் பெண்டிர் தகாத கடுஞ்சொல் பேசினால் உணர்பண்புகளின் மதிப்பு குறைந்துவிடும். அதனால்தான் நான் ஒன்றும் பேசவில்லை" என்றாளாம் அவள் ஊடற்காலத்தில் கடிய உணர்வுகளையும் துயரத்தையும் பண்பாடு எந்த அளவுக்குக் கட்டிக் காக்கிறது என்பது இத்துறைப் பாடலால் வெளிப்படுகிறது. ஒரே துறையில் பல பாடல்கள் பாடப்பட்டாலும் அவை அப்பாட்டுக்குரிய வரின் மனவளத்தை நன்கு அளவிட்டுக் காட்டிவிடுகிறது. ஒவ்வொரு அகத்துறையிலும் பாடப்பட்ட உயர்ந்த பாடல்களைக் கேட்கும் வாய்ப்பைப் பெறும் பண்பில்லாதவரும் அகவாழ்வுக்குத் தேவைப் படும் உயர்ந்த மனவளத்தைப் பெறுவார்கள்.

எனவே, துறையமைய அகப்பாடல்களைப் பாடுவது என்பது மேன்மேலும் உயர்ந்து செல்லவேண்டிய மாந்தரின் பண்பாட்டைக் காத்து வளர்க்கும் முயற்சியின் அடிப்படை என்றறியலாம்.

திணை துறை பாகுபாட்டின் பயன்கள்:

1. திணை துறை பிரிக்கப்படாவிடின் சில அகப்பாடல்களின் பொருளே விளங்காமற் போய்விடும்.

2. காதல் தொடர்பான செய்திகளை மறைத்தே கூறுவர். அகப் பாடல்கள் என்னும் பெயர் இதனால்தான் ஏற்பட்டது. மறைத்துச்

www.thamizham.net - Free E book No 7502

சொல்லப்படும் செய்தியைத் திணை துறை பாகுபாடு குறிப்பாக வெளிப்படுத்திக் காட்டும்.

3. அகச் செய்திகளை மறைத்துக் கூறுவது உயர்ந்த நாகரிகத்தின் அடையாளம்.

4. துறையமைப் பாடுவது பண்பாட்டின் அளவுமானியாக அமைகிறது.

5. அகத்துறைகள் புலமைத் திறத்திற்குத் தூண்டுகோலாகவும் அகவாழ்வின் சட்டக் கூறுகளாகவும் நின்று சுவை பயக்கின்றன.

அன்பின் ஐந்திணை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தையும் அன்பின் ஐந்திணை எனக் கொண்டார். மலரினும் மெல்லிது காமம் என்பதால் ஓரளவுக்குப் பண்பட்ட மனநிலையினரே அதன் அருமையை உணரவல்லவர். வலிந்துகூடும் பெருந்திணையும் தன்னை விரும்பாதவரைத் தான் விரும்பும் கைக்கிளையும் விலங்கியல்புகளாதலின் உணர்திணைக்குரிய அன்பின் ஐந்திணையில் சேர்க்கப்படவில்லை. கைக்கிளை பெருந்திணைக்குரிய பாடல்களை எவரேனும் பாடுவராயின், அவற்றை அஃறிணைப் பாடல்களாகப் பழந்தமிழர் கருதினர் போலும். உள்ளத்தின் சுவையை நுகர்வது காதலின் அடிப்படையாகவும், உடல்நலம் நச்சுவது காமத்தின் அடிப்படையாகவும் இருந்த நிலையையே மேற்கண்ட பாகுபாடு காட்டுகிறது எனலாம்.

குறிஞ்சி மலைநிலம், இங்கு மக்கள் தொகை மிகவும் குறைவு. ஒரு மலை முகட்டில் வாழும் ஐந்து குடும்பத்தினர் மற்றொரு மலையிலிருந்து யாரேனும் வரமாட்டார்களா என எதிர்நோக்குவர். மாந்தரைக் காண்பதே அவர்களுக்கொரு மகிழ்ச்சி. ஆணும் பெண்ணுமாக எதிர்ப்படுவது மேலும் புதுமை மக்கள் தொகை குறைந்த நிலப்பகுதியில் இனப்பெருக்கம் குறித்த புணர்ச்சியே அகவொழுக்கமாயிற்று.

ஆணும் பெண்ணும் இணைந்த அகவாழ்வு நிலையான உணவுப் பொருள் தேடி இல்லறத்திற்கேற்ற முல்லைநிலம் நோக்கி மலையிலிருந்து இறங்கி வந்தது. முல்லைநிலம் அளவான மக்கள் தொகை கொண்டது; காடுபாதியும் நாடுபாதியுமாக அமைந்த இயற்கையான வாழ்வுச்சூழல். மாந்த உணர்வுகளும் அகப்புற ஆசைகளும் மட்டுப்படுத்தப்பட்ட கட்டான சூழல். ஆதலால் அமைதியான இல்லறத்திற்கு அடித்தளமாயிற்று. அகவாழ்வின் செம்மைக்கும் புறச்சூழல்களே அடிப்படை என்பது இதனால் விளங்குகிறது.

www.thamizham.net - Free E book No 7502

மருதநிலம் செல்வத்திற்கு, ஏழ்மை அடிபணிந்து வாழுமிடம். மக்கள் தொகை மிகுதி அதிகாரமும் செல்வமும் பெற்றவர் அக வாழ்வில் செம்மை திறம்புகின்றனர். செல்வம் குவியும் இடத்தில் ஒழுக்கம் கெட, வாயில்கள் தாமாகத் திறக்கின்றன; பரத்தமை வாழ்வு பெறுகிறது.

நெய்தல் நிலம் வணிகத்தில் சிறந்தது. கடல் கடந்து செல்வோர் மிகுதி. வாழ்வில் பல்வகை தோல்விகளைத் தழுவிச் சலித்துப் போனவர்களைப் போல் கடல்சார் நெய்தல் நிலவாழ்வு புல்லென்றிருக்கும். அவர்களுடைய உள்ளமிடும் ஓலம், கடலலைகளின் ஓயாத ஓலத்திற்கு ஒப்பாவதால் நெய்தல் இரங்கல் பொருள் தருவதாயிற்று. நெய்தல் நிலம் கடற்கரை மட்டுமன்று; கடலும் சேர்ந்தது. கடலையும் சேர்த்து (வாழ்வுக்குரிய நில எல்லை) நெய்தல் திணையாகப் பிரித்த தமிழரின் நிலவியலறிவு பாராட்டத்தக்கது.

பாலைநிலம் வறண்டிருப்பதால் மக்களின் மனமும் வறண்டு கடினமாயிற்று கன்னெஞ்சத்தவரும் வன்னெஞ்சத்தவரும் அங்கு மிகுதி. ஆறலைக் கள்வரும் கொன்றுழலும் தீயவரும் வாழும் பாலை நிலத்தை அன்பின் ஐந்திணையில் சேர்த்தது ஏன் என்று வினவக் கூடும். பாலைநிலமான முல்லையும் குறிஞ்சியும் மீண்டும் மழை வளத்தால் செழித்தால் அக்கொடியவரும் நல்லவராதல் கூடும். கொடிய கள்வனும் தன் மனைவி மக்கள்மீது ஆராத அன்புடையவனே. பாலைநிலத்து விலங்குகளும் அன்பு வாழ்வின. ஆதலால் பாலைத்திணையும் அன்பின் ஐந்திணையுள் சேர்க்கப்படுவதாயிற்று.

மருதமும் நெய்தலும்கூட மழை பெய்யாத 'வற்கடம்' (பஞ்சம்) வருமாயின் பாலைநிலமாகாதா என வினவலாம். மருதநிலத்தில் மழை வறண்டாலும் அடிநிலத்து ஊற்றுநீர் குறையாது. நல்ல விளையுள் காலத்தில் சேமித்த உணவுப் பண்டங்களும் வறுமை வராமல் தடுக்கும். நெய்தல் நிலத்திலும் மருத நிலத்திலும் பெருகியுள்ள தொழிற் பெருக்கமும் வணிக வளமும் செல்வப் பெருக்கமும் கொடிய வறட்சியையும் தாங்கிய மக்களுக்கு வாழ்வளிக்கும். இவர்கள் குறிஞ்சி முல்லை நிலத்தாரைப் போன்று இடம் பெயர்ந்து செல்ல வேண்டுவதில்லை.

குறிஞ்சி அகவாழ்வின் முதல் நோக்கமான கூடுதலைக் காட்டுகிறது. முல்லை நிலம் மக்கட் செல்வம் குலவும் இல்லறத்தைக் காட்டுகிறது. பாலை நிலம் வாழ்க்கையில் புறப்போராட்டமான பிரிவைக் காட்டுகிறது. நெய்தல் நிலம், வாழ்க்கையே முடிந்து போன அல்லது முடியுந்தறுவாயிலுள்ள அவலத்தை அள்ளி நிற்கிறது. உலகில் அனைவரின் வாழ்வும், வளரும் இளமையில் தோன்றி மாழ்கும் இரங்கலில் முடியும் பாங்கே அன்பின் ஐந்திணை

www.thamizham.net - Free E book No 7502

யான காதல் வாழ்வின் இயல்பு. வாழ்நாளில் ஒரு நாளாயினும் உவகைக் கண்ணீர் சொரியும் வாய்ப்பைக் கண்கள் பெற்றனவோ இல்லையோ, துன்பக் கண்ணீர் சொரிய வேண்டிய சூழ்நிலையிலிருந்து மாந்தரின் கண்கள் தப்ப முடியாது என்பதை ஐந்திணை அமைப்பு வகைப்படுத்திக் காட்டுகிறது.

மழையின் வறுமை பாலை நிலம். செல்வத்தால் வறுமையுறல் ஒழுக்கம் சிதையும் மருத நிலம். உயர்ந்த பண்புகளின் வறுமையால் நல்லஉள்ளங்களில் ஆறுத புண்ணை உண்டாக்குவது நெய்தல் நிலம். மேற்கண்ட வறுமைகள் உயர் பண்புகளை அழித்து விடுகின்றன. எத்தகைய வறுமைவரினும், பண்பாட்டுக்குத் தலைமை தரும் மக்கள் அமைப்பு, என்றும் நிலைத்து வாழும் குடிப்பெருமையுடையதாகிறது. அகவாழ்வின் செய்ம்மை புறவாழ்க்கையைச் செம்மைப்படுத்தும். அகவாழ்வின் ஆணிவேர் கற்புடைமை. கற்பால்தான் குடிப் பெருமை நிலைக்கிறது. குடிப்பெருமையால் பண்பு வாழ்கிறது. பண்புடையவர்களால்தான் உலகம் வாழ்கிறது. உலகத்தைப் பண் பாட்டின் பிடியிலிருந்து நழுவவிடாமல் நல்ல இலக்கியங்கள் காத்து வருகின்றன. நல்ல இலக்கியத்திலும் நல்ல இலக்கியம் என்பது அகவாழ்வைப் பண்பாட்டுப் பின்னணியில் விளக்கும். இலக்கியம் அகவாழ்வைப் பண்பாட்டுப் பின்னணியில் விளக்கவும், பெறும் கைக்கிளை பெருந்திணைப் பாடல்களாகி விடாமல் இலக்கியக் கட்டுக் கோப்பைக் காக்கவும், திணை துறை பாகுபாடுகள் உதவுகின்றன.

குறிஞ்சியில் காதல் கவர்ச்சி; முல்லையில் உடைமை (ஆனிரை) கவர்ச்சி; மருதத்தில் நிலக் கவர்ச்சி; நெய்தலில் செல்வம்தேடும் பொருள் கவர்ச்சி; பாலையில் உயிர் கவர்ச்சி; இத்தனைக் கவர்ச்சி களாலும் கவரப்படாமல், என்றும் அன்பு ஒன்றால் மட்டும் கவரப் படும் வாழ்வே அன்பின் ஐந்திணை.

வட இந்தியாவில் தமிழ்த் திணை துறை :

பழங்காலத்தில் தமிழ்த் திணை துறைகள் வடநாட்டிலும் அறி முகமாகியிருந்தன என்று கருத இடமிருக்கிறது. கபிலர் பத்துப் பாட்டுள் ஒன்றான குறிஞ்சிப் பாட்டைப் பாடியவர். அக்காலத்தில் வடநாட்டில் அரசாண்ட யாழ்ப் பெருந்தத்தன் (பிருகதத்தன்) என்ப வனுக்குத் தமிழ் கற்பிக்கவும் தமிழரின் அகவொழுக்கத்தைப் புலப் படுத்தவும் குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் இயற்றினார் என்று கூறப் படுகிறது. இதிலிருந்து வடநாட்டின் வேந்தரும் புலவர்களும் தமிழை விரும்பிக் கற்றனர் என்று தெரிகிறது. கபிலர் என்னும் பெயர் பூண்ட பிராகிருத புலவர்களும் வடநாட்டிலிருந்தனர். இருக்கு வேதத்தில் வரும் 'பன்சஜன்' என்னும் சொல் வடமேற்கு இந்தி யாவில் வாழ்ந்திருந்த ஐந்திணை மக்களாகிய திரவிடரையே குறிக் கும் என பி. தி. சீனிவாச ஐயங்கார் **The History of the Tamils**

www.thamizham.net - Free E book No 7502

களவும் கற்பும்

—புலவர். ச. சிவசங்கு, ஏரல்

களவு : பழந் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையை இரு பெரும் பிரிவாக பிரித்துக் கொண்ட முறை, பெரிதும் நுட்பம் வாய்ந்ததாகும். அஃதாவது அகவாழ்வு, புறவாழ்வு எனப் பகுத்துக் காதல் எனவும் வீரம் எனவும் வகைப்படுத்தினர். அகவாழ்வு இல்லறம் பற்றியதும், புறவாழ்வு அவ்வில்லறத்தை இனிதே நடத்தற் பொருட்டுத் தங்களைக் காத்தும் பிறர்க்கு உதவி செய்து வாழ்வதும் ஆகும். அகவாழ்வைக் களவு, கற்பு எனப் பிரித்தனர். "களவு" என்பது அறத்தொடு பட்டது என்பர் உரையாசிரியன்மார் குடும்பத் தலைவன் அறியாமல், அவன் மகள் உள்ளத்தை ஒரு தலைவன் களவாடுதலும், அங்ஙனமே தலைவன் உள்ளத்தை அவன் பெற்றோர் அறியாமல் தலைவி கவர்தலும் ஆம் என அதற்குக் காரணியம் கூறுவர்.

இக் களவுக்கு உட்பட்ட தலைவனும் தலைவியும் ஊழ் வயத்தால் நேர்பட்டுச் சேர்வர். அங்ஙனம் அவ்விருவரும் நேர் படுங்கால் உள்ளம் ஒன்றுபடுவரே அன்றி, மேனியைத் தீண்டலோ, உடலுறு புணர்ச்சியோ யாண்டும் பழந் தமிழிலக்கண இலக்கியங்களில் காண வியலாது. ஒரோ வழி "மெய் தொட்டுப் பயிறல்", "சாக்காடு" முதலியன யாவும், நாடக வழக்காம் என மறுக்க!! 'களவு" பற்றிய ஆயிரக்கணக்கான கழகப் பாடல்களில் களவுக்கு உடம்பட்ட தலைவி, குழந்தை பெற்றதாக இல்லவே இல்லை என்பதொன்றே சாலும். மற்று "காந்தருவ மணம்' என வடவரால் புகழப்படும் களவில், சகுந்தலையும் துசியந்தனும் ஒரு நாளையில் மனமொத்ததும் கூடிக் குழந்தை பெற்றனர் என்பதை நாம் அறிவோம்!

இருவகை மண முறை : இனி, இக் களவில் நேர் பட்டு உள்ளம் ஒன்றிய தலைவன் தலைவியர்க்குச் சில நெறி முறைகள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

(ப—84) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, தமிழின் திணை துறை பாகுபாடுகள் வடநாட்டிலும் தெரிந்திருக்கும் என்றும் அது பிற்காலத்து வழக்கிறந்தது என்றும் கருதலாம்.

'என் நெஞ்சத் திறப்போர் நிற்கான்குவரே' என்பன போன்ற அகப்பாடல்கள் தமிழிலுள்ளது போலவே சிறிதும் கருத்து மாறுமல் முழுமையாகப் பிராகிருதப் பாடல்களில் இருப்பதைக் காணும்போது பிராகிருத மொழிக்கும் தமிழுக்கும் இடையே நிலவிய கொள்கொடை உறவு தெளிவாகப் புலனாகிறது. பழந்தமிழர்களின் அகவாழ்வின் செம்மை இமயம் முதல் குமரி வரை மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்த நிகழ்ச்சி தமிழ்ப் பண்பாட்டின் சீர்மையைக் காட்டுகிறது.

www.thamizham.net - Free E book No 7502

வகுக்கப்பட்டன. தலைவனுக்குப் 'பெருமையும் உரனும் ஆடூஉமேன' என வரையறுக்கப்பட்டது. "தன்னைப் பெருந்தன்மைக்கு உட்படுத்திக் கொள்வதும், அதனை நிலைநிறுத்திக் கொள்ளும் அறிவாற்றலும் ஆண் மகனிடத்தன" என்பது பொருள். தலைவிக்கு "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப". அன்பு காரணியத்தாற்றோன்றிய அச்சமும், காமக் குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதோர் உள்ள வொடுக்கமும், கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையும், முன் கண்டறியாதன கண்ட வழி மனங் கொள்ளாத பயிர்ப்பும், செய்யத் தக்கது அறியாத பேதைமையும், நிறுப்ப நெஞ்சுண்டாம் நிறையும் கொள்ளப்படும். 'மடன்" குடிப் பிறந்தோர் செய்கையாதலின், அச்சமும் நாணும் போல மெய்யுறு புணர்ச்சியை விலக்குவதாம், என நச்சினார்க்கினியர் பொருள் விரிப்பர். (தொல்-களவு 7, 8), அடுத்து இவர், தோழி தோழன் முதலியோர் வாயிலாக "அறத்தொடு நின்று" அஃதாவது தோழி, செவிலி, நற்றாய், தந்தை ஆகியோர்பால் முறையே களவைக் குறிப்பாகத் தெரியப்படுத்திக் கற்பு வழிப்படுவர். இதில் தோழி, மிகவும் நுண்ணறிவோடு தலைவிக்குச் சிறிதும் இழுக்கு நேரா வண்ணம் கொண்டு முடிப்பள்! இதுகாறும் கூறியது களவு பற்றி வந்த மணம்!!

கற்பின் வழியும் மணம் உண்டு. அஃது இக்காலம் போலப் பெற்றோரும் உற்றோரும் கலந்து பேசி, தலைவனுக்கும் தலைவிக்கும் மணம் செய்விப்பதாம்.

> "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"
>
> (தொல்—மெய்—25)

இப் பதினொன்று பொருத்தமும் தலைவனுக்கும் தலைவிக்கும் இன்றியமையாதனவாய்ச் சான்றோர் சூழ்ந்து, அவர்களைக் கூட்டித் திருமணம் நிகழ்த்துவர் இக்காலப் பொருத்தம் பார்ப்பது வடவாரிய முறை என்க!!

அறிவு சான்ற தோழி : இனி, மேல் கூறிய களவால் நிகழும் மணத்தைத் தோழி இரண்டு திங்கட்கு மேல் நீட்டிக்க விடாள்! அதற்குச் சில சூழ்ச்சிகளைக் கையாள்வாள். தலைவனைத் தோழியோடு தலைவி சந்திப்பாள்! அச் சந்திப்பு, தலைவியின் இல்லத்தின் அருகே மறை விடத்திலும், வேறு சில இடங்களிலும் நிகழும். பெரும்பாலும் இரவு வரவே தோழி விரும்புவாள்! பகல் வருக என்றும் சொல்வாள்! அப்படி அவனை வரச் சொல்வது, தானோ, அல்லது தலைவியோ தங்கட்குள் உரையாடுவதுபோல் அவன் மறைந்து

www.thamizham.net - Free E book No 7502

நின்று கேட்குமாறு செவ்வியாக்கி, கடிதே வரைந்து கொள்ள முயற்சி செய்யுமாறு தூண்டுதலாக அமைத்துப் பேசுவர். தோழி, வரையும்படி தலைவனிடம் நேரிடையாகவும் கூறுவள்.

குறியா இன்பம்: வளமான இலைகளையுடைய வாழைக் குலை முற்றிக் கனிந்திருந்தது! சிறந்த வருக்கைப் பலாவும் பழுத்து முற்றிக் கிடந்தது! இவை, பக்க மலைகளில் ஒரு பாறையின் குழிந்த இடத்திலே நின்றன. இவற்றின் மணம். முன் உண்டு பழகியவர் சென்றால் இவற்றை உண்ணுதல் செல்ல விடாது தடுக்கும். 'உண்ணுநர்த் தடுத்த ஊழுறுதீங்கனி"! இவை நன்கு கனிந்து, பாறையின் குழியிலே தேனாகக் கசிவுண்டாகிக் கீழே சொட்டுச் சொட்டாய் விழுந்து 'தேட்கடுப்பன்ன நாட்படுதேறலாகி' விட்டது!! ஒரு குரங்கு நீர் வேட்கையால், இதனைத் தேறல் என்று அறியாது குடித்து விட்டது!! மயக்கம் முதிர்ந்து. மிளகுக் கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏறவேண்டிய அது, மணமிக்க பூக்களாலாய பூம் படுக்கையில் களிப்பால் உறங்கி விட்டது! சிந்தனையும் முயற்சியும் இன்றித் தானாகவே கிடைத்த இன்பம் இக் குரங்குக்கு மட்டும் இன்றி பல்வேறு வகைப்பட்ட விலங்குகளும் எளிதாக அடையும் நாட்டை யுடையவனே!

"குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல் வேறு விலங்கும் எய்தும் நாட!
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய?"

என்று தலைவிக்கு ஏற்ற தோழி தலைவன் உள்ளம் உறைத்துக் கேட்குமாறு மீண்டும் நுணுகி ஆய்ந்து மேற்கொள்ளும்படி உரை யாடுகிறாள்.

"மிக்க அழகிய வேய் போன்ற தோளுடைய தலைவியானவள், மடக்கி நிறுத்தவும் நில்லாது, நின் அன்பு நிறைந்த உள்ளத்தோடு ஒன்றி விட்ட காதலுடையளாகின்றாள்! பகற் காலத்தே வரும் நீ, இனி இவள் தந்தையின் காவலாளர் சோர்ந்திருக்கும் செவ்வி பார்த்து, இரவில் வருவதற்கும் உரிமை உடையை ஆவாய்! அன்றி யும், வேங்கை மரங்களும், ஒள்ளிய பூங்கொத்துகள் விரியப் பெற்றன. நெடு வெண் திங்களும் நிரம்புதலுற்றது!" என்று கூறித் தலைவனை வரைவு கடாவிய சொற்றிறம் பெரிதும் இனிமை வாய்ந்தது!

கங்குல் வருதலும் உரியை, பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களும் ஊர்கொண்டன்றே"

கங்குலும்-இரவு வருதலும் உரிமைய என்றவள் திங்களும் நிறைந்தது என்றும் கூறியதனால் நிலவொளியில் உன் வரவு வெளிப்படும்

www.thamizham.net - Free E book No 7502

என்று குறிப்பித்தாள். மேலும், வேங்கை பூத்தால் தினை அறுத்து விடுவார்கள்! தலைவியோ தினைக் காவலுக்கு வாராள்; நீ அவளை அங்குப் பகலும் சந்திக்க இயலாது என இற்செறிப்பையும் அறிவுறுத்தினுள்! வேங்கை பூத்தலும் நிறை நிலவும் மணத்திற்கு ஏற்ற நாளானபடியால் பிறர் வந்து பெண் கேட்கவும் கூடும், என்றுளாம். காவலர் சோரும் நேரம் பார்த்து வருக என்றதனுல், அச்சமும் தெரிவித்தாளாயிற்று! இந் நயங்கள் கண்டு நுகர்க!!

திரிக்கோவையார்

“மையார் கதலி வனத்து வருக்கைப் பழம் விழுதேன்
எய்யாது அயின்றிள மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதி யூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கை பொன் மாலையின்
முன்னினவே”

என, மாணிக்கவாசகர் அகம் 2-ஆவது பாடற் கருத்தை அப்படியே தம் சிற்றம்பலக் கோவையாரில் போற்றிக் கொண்டமை அறிந்து இன்புறத்தக்கது.

உள்ளுறை உவமம்: “இனி,க் கடுவன் தேனை நுகர்ந்தது” என்றதனுல், நீ இக் களவொழுக்கத்திலே இன்புற்றிருக்கின்றுய். என்பதும், “தனக்குரிய மரம் ஏறமாட்டாதாயிற்று” என்றதனுல், உனக்கு உரிய அறநெறியில் நிற்றலைத் தப்பினுய் என்பதும், சந்தன “மரத்தின் நிழலில் பூம் படுக்கையில் உறங்குகிறது;’ என்றதனுல், இக்களவினை நீக்கி வரையவும் மாட்டாது களவொழுக்கமாகிய இன்பக் களிப்பிலே மயங்குகின்றனை என்பதும் உள்ளுறுத்துப் பொருள் காணும் தன்மையால் கருப் பொருள் மேலேற்றிக் கூறிய “உள்ளுறை உவமம்” நோக்கி மகிழத்தக்கதாகும்.

பயன்: இங்ஙனமாகத் தோழி, தலைவனோடு இனிமையாகப் பேசுவதிலிருந்து, இக் களவொழுக்கத்தை நீட்டிக்க விடலாகாது என உணர்ந்து, தம் பெற்றோர் உற்றாரிடம் தம் விருப்பத்தை எடுத்துக் கூறி, அவர் மூலம் அத் தலைவியின் உற்றார் பெற்றோரிடம் பெண் கேட்டுக் கடிதே அவளை வரைந்து கொள்வது பயனுகும். 0

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறுர்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும்.

—**அமைச்சர்**

www.thamizham.net - Free E book No 7502

தமிழ்ப் பேரரசு

சி. பா. ஆதித்தனார்.

7. ஒரு மொழி—ஒரு நாடு

தமிழ் மக்கள் தற்போது சிதறுண்டு கிடக்கிறார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நாடாக வாழவேண்டும் என்ற ஆசை தமிழ் மக்களின் நெஞ்சத்தில் எழுந்து உள்ளது. சில பல பகுதிகளில் தமிழ் மக்கள் பிரிந்து சிதறுண்டு கிடக்கும் நிலை நீங்கி ஒரே நாடாக ஒரு குடைக் கீழ்த் தமிழ் இனம் வாழவேண்டும் என்ற விருப்பம் இயற்கையானது.

பாண்டிச்சேரியிலும், வேங்கடத்திலும், பீர்மேட்டிலும், யாழ்ப் பாணத்திலும், சென்னை மாகாணத்திலும் சிதறுண்டு—தனித்தனி யாக வாழ்வதால் தமிழ் இனம் வலுவற்றுக் கிடக்கிறது. இந்தப் பகுதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ' உரிமைத் தமிழ்நாடு" அமைத் துக்கொண்டு, வல்லரசாகத் திகழவேண்டும் என்பது தமிழ் இனத் தின் நயன்மையான ஆசை அல்லவா?

தமிழகத்தில் இருக்கிற 400 இலக்கம் தமிழர்களும், இலங்கை யில் இருக்கிற 25 இலக்கம் தமிழர்களும் ஒன்று சேரவேண்டும் என்றால், அதைத் தடுப்பதற்கு யாரால் முடியும்?

இவ்வாறு தமிழர்கள் ஒன்று சேர முடியாது என்றும், தமிழ் நாட்டுக்கு விடுதலை கிடைத்தால் அது சிதறுண்டு பல பகுதிகளாகப் பிரிந்து, பாண்டிய நாடு என்றும், சோழ நாடு என்றும், கொங்கு நாடு என்றும், பல்லவ நாடு என்றும்—இவ்வாறு பல துண்டு களாகப் பிரிந்துவிடும் என்றும் புதிய புரளி கிளப்பிவிடப்படுகிறது. இதற்குக் கொஞ்சம்கூட அடிப்படை கிடையாது.

நிலநூல் காட்டும் உண்மை!

உலகில் ஒரு மொழி பேசுகிற மக்கள், ஒரு நாடாகவே வாழு கிறார்கள் என்பது நிலநூலைப் பார்த்தால் தெரியும். உலகமெங்கும் உள்ள நாடுகள் பொதுவாக "ஒரு மொழி—ஒரு நாடு" என்ற முறை யிலேயே அமைந்திருக்கின்றன. பிரெஞ்சு மொழி பேசுகிற மக் களுக்கு ஒரு நாடு—பிரான்சு நாடு; இசுபானிய மொழி பேசுகிற மக்களுக்கு ஒரு நாடு—இசுபெயின் நாடு; போர்த்துகீசிய மொழி பேசுகிறவர்களுக்கு ஒரு நாடு —போர்த்துகல் நாடு.

இவ்வாறு, "ஒரு மொழி—ஒரு நாடு" என்ற முறை உலகெங்கி லும் உள்ளது.

ஒரு மொழி பேசுகிற மக்கள் துண்டாக—2 நாடுகளாகப் பிரிந்து கிடந்தால், அந்தப் பிரிவினை நீடித்து நிற்பதில்லை என்ப

www.thamizham.net - Free E book No 7502

தற்கு எடுத்துக்காட்டாக "இராக்" "சோர்டான்" என்ற 2 அரபு நாடுகள் ஒரே நாடாகச் சேர்ந்து விட்டன. இதைப்போல் ஒரே அராபிய இனத்தவர்களான "எகிப்து" நாட்டுக்காரர்களும், 'சிரியா' நாட்டுக்காரர்களும் ஒன்ருக இணைந்து, ஒரே அரசுo அமைத்துக் கொண்டார்கள்.

ஆகவே, மொழியால், இனத்தால் ஒன்றுபட்ட மக்கள் ஒரே நாடாக வாழ்வதுதான் இயற்கை! அதுவே வரலாறு காட்டுகிற உண்மை. அதேபோல் தமிழ் இனம் ஒன்று சேர்ந்து, ஒரே நாடாக, உரிமைத் தமிழ்நாடாக மாறுவதைத் தடுத்து நிறுத்த எந்த மாந்தராலும் முடியாது.

எது இரண்டகம்?

இவ்வாறு தமிழ் இனம் ஒன்று சேர்ந்து, தில்லியின் வல்லாண்மையில் இருந்து விடுபட்டு, உரிமையுடன் வாழவேண்டும் என்று சொல்லுகிறவர்களை 'இரண்டகர்கள்' என்று சில 'தேசியவாதிகள்' குற்றம் சாட்டுகிருர்கள்!

இந்தியா தேசத்தைத் துண்டு போடுவது 'இரண்டகம்' என்பதாக தேசியக் கொள்கையர் சொல்லுகிருர்கள். அவர்களைக் கேட்கிருேம்—தமிழ்நாடு இப்போது துண்டுபட்டுக் கிடக்கிறதே! அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பது, தமிழ்நாட்டுக்கு இரண்டகம் இல்லையா?

சிதறுண்டு கிடக்கும் பகுதிகள்

பீர்மேடு—தேவிகுளம், நெய்யாற்றங்கரை ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டில் இருந்து பிரிக்கப்பட்டு, மலையாளிகளின் கையில் சிக்கிக் கிடக்கின்றனவே! அந்தப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேர வேண்டாமா?

வட எல்லையில் வேங்கடம் வரையில் உள்ள தமிழ்ப் பகுதிகள், ஆந்திரர்களின் ஆட்சியில் கிடக்கின்றனவே! அந்தப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேர வேண்டாமா?

புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்கள் தில்லியின் கண்காணிப்பில் இருக்கின்றனவே! அந்தப் பகுதிகளில் வாழுகின்ற

"இராக்"[3] நாட்டு மக்கள் தொகை 51 இலக்கம்: 'சோர்டான்' நாட்டு மக்கள் தொகை 16 இலக்கம் பேர்.

எகிப்து மக்கள் தொகை 200 இலக்கம்; சிரியா நாடு 34 இலக்கம்.

oஒன்றிய அரபுக் குடியரசு.

www.thamizham.net - Free E book No 7502

வர்கள் தமிழர்கள் தானே! அவர்கள் தமிழ்நாட்டுடன் சேர வேண்டாமா?

18 கல் அகலம் உள்ள ஒரு சிறிய நீர்ப்பகுதிக்கு அப்பால், வட இலங்கையில் தமிழ் மக்கள் வாழுகிறார்கள்! அதுவும் தமிழ்நாட்டின் ஒரு பகுதிதான்! அது, தாயகத்தில் இருந்து பிரிந்து கிடக்கிறதே!

"இந்திய தேசம் துண்டுபடக் கூடாது" என்று கவலைப் படுகிற தேசியக் கொள்கையர் தமிழ்நாடு இவ்வாறு சிதறுண்டு கிடப்பதைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

ஆகையால், தமிழ்நாடு ஒன்று சேர வேண்டும் என்று சொல்வது 'இரண்டகம்' ஆகாது! இவ்வாறு ஒன்று சேருகிற பகுதிகள் ஒரு விடுதலை நாடாக இருக்க வேண்டும் என்று கூறுவதும் 'இரண்டகம்' அன்று!

இரண்டகமா? வீரமா?

தமிழ்நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்று சொல்லுகிறவர்களை, 'இரண்டகர்கள்' என்று தேசியக் கொள்கையர் இன்று தூற்றினாலும், அவர்களைப் பற்றிப் பிற்காலத்து வரலாறு, 'வீரர்கள்' என்று போற்றக் கூடும்!

தில்லிக்குத் தமிழ்நாடு அடிமைப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், தங்களைத் 'தேசியக் கொள்கையர்' என்று பெருமையாக இன்று சொல்லிக் கொள்ளலாம்! ஆனால், வருங்கால வரலாற்றாசிரியர்கள் அவர்களை 'இரண்டகர்கள்' என்று முடிவு கட்டலாம்! அல்லது தில்லியின் 'கங்காணிகள்' என்றும், வடவர்களின் 'கைக்கூலிகள்' என்றும் தீர்ப்பு அளிக்கலாம்!

8. "தமிழன் கால்வாய்"

தமிழ்நாட்டில் நீர்வளம் கிடையாது என்றும், தமிழ்நாடு ஒரு வறண்ட நாடு என்றும், ஆகையால், அது முழுவுரிமை நாடாக விளங்கத் தகுதி அற்றது என்றும் இழிவாகக் கூறப்படுகிறது.

பாலாறு வற்றியது ஏன்?

தமிழ்நாட்டில் பாலாறு போன்ற ஆறுகளில் தண்ணீர் இல்லாததை மனத்தில் வைத்து அதை 'வறண்ட நாடு' என்றும், 'நீர் வளம்' இல்லாத நாடு என்றும் சொன்னால், அது தவறு.

'தமிழ்நாட்டில் நீர்வளம் நிலவளம் இல்லை' என்று 'தினமணி' இதழ் ஆசிரியவுரை எழுதியது.

'தமிழ்நாடு வறண்ட நாடு, ஆகையால் அது முழுவுரிமை நாடாக இருக்கத் தகுதி அற்றது' என்று சட்டசபைப் பெண் உறுப்பினர் குழந்தை அம்மாள் பேசினார்.

www.thamizham.net - Free E book No 7502

பாலாற்றில் தண்ணீர் ஓடாமல் இருப்பதற்குக் காரணம், மைசூர் நாட்டில் அணைகட்டி, அதன் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ளுவதே ஆகும். இப்போது தமிழ்நாடு, தில்லியின் கீழ் ஒரு மாகாணமாக இருப்பதால் பாலாற்றின் நீரை மைசூரில் தேக்குவது பற்றித் தமிழ்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு தில்லியின் பிடியில் இருந்துவிடுபட்டு உரிமை நாடு ஆனால், பாலாற்றில் தண்ணீர் விடும்படி உரிமையுடன் கேட்க முடியும். ஏன் என்றால், உரிமை நாடுகளுக்குத் தண்ணீர் உரிமை உண்டு. அந்த உரிமையுடன் கேட்டு, இழந்து விட்ட தண்ணீரைப் பெறுவதற்கு முடியும்.

மேலும், தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகி, மலையாளத்தில் ஓடுகிற (சோலை ஆறு, பரம்பிக்குளம்) ஆறுகளின் தண்ணீரை, தமிழ்நாட்டுக்குப் பயன்படச் செய்யும் பணியைத் தன்னுரிமைத் தமிழர்கள் தாம் செய்ய முடியும்!

“ஆறு” இல்லாத வல்லரசு!

ஆனால், ‘ஆறு’ ஒன்றுதான் ஒரு நாட்டின் வளத்தை உறுதிப் படுத்துவதாகச் சொல்ல முடியாது; ஏன் என்றால், ‘ஆறு’ என்று பெயர் சொல்வதற்கு ஓர் ஆறுகூட இல்லாத நாடுகள் (இங்கிலாந்து, சப்பான்) வல்லரசுகளாக இருக்கின்றன. ஆகவே ஒரு நாட்டின் ‘வளம்’ என்பது அந்த நாட்டின் பொருளியல் முன்னேற்றத்துக்கு வாய்ப்பாக உள்ள இயற்கை ஏந்துகளையும், மூலப்பொருள்களையுமே முகாமையாகக் குறிப்பிடுகிறது.

தமிழன் கால்வாய்

இரும்பு, நிலக்கரி, உப்பு, சுண்ணும்புக்கல் ஆகிய மூலப் பொருள்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. இவை தவிர, கோடிக்கணக்கில் வருமானம் தேடிக் கொடுக்கும் வாய்ப்பை உண்டு பண்ணக்கூடிய தனி ஏந்தும் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதுதான் தமிழன் கால்வாய்!

‘சேது சமுத்திர’த்தை ஆழப்படுத்தி, அதிலே கப்பல்போகிறபடி கால்வாயைத் தோண்ட வேண்டும் என்கிற ‘தமிழன் கால்வாய்’ திட்டத்தை (சேது சமுத்திரத் திட்டத்தை)த் தில்லி அரசு கைவிட்டு விட்டது!

இந்தக் கால்வாய்த் திட்டம் தமிழ்நாட்டுக்கு முகாமையானது. ‘சேது சமுத்திரம்’ என்ற கடல், தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே இருக்கிறது. இந்தக் கடலுக்கு மேற்கே இராமநாதபுரம் மாவட்டமும், கிழக்கே யாழ்ப்பாணமும் இருக்கின்றன. அதாவது கடலின் இரண்டு பக்கத்திலும் வாழ்பவர்கள் தமிழ் மக்களே.

www.thamizham.net - Free E book No 7502

இந்தக் கடலின் ஆழம் மிகவும் குறைவு. ஆகையால் தற்பொழுது அதன் வழியாகக் கப்பல்கள் போக முடியாத நிலைமையில் இருக்கிறது. இதைக் கொஞ்சம் ஆழப்படுத்தி, கடலுக்கு உள்ளேயே சிறுகால்வாய்கள் வெட்டினால் கப்பல் போவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அவ்வாறு வாய்ப்பு ஏற்படுத்தினால், ஐரோப்பிய நாடுகளில் இருந்து, கிழக்கத்திய நாடுகளுக்குப் போகிற கப்பல்கள் எல்லாம், இதன் வழியாகத்தான் போய் ஆக வேண்டும் என்ற நிலைமை ஏற்படும்!

மலாயா நாட்டுக்கு வடக்கில் 'கிரா' என்ற இடத்தில் இது போன்ற வேறு ஒரு கால்வாய் வெட்டுவதற்கு ஏற்பாடு ஆகிக் கொண்டு இருக்கிறது. அது வெட்டப்பட்டால், 'சேது சமுத்திரத்தில் வெட்டப்படும் கால்வாய், எகிப்து நாட்டுக்கு, சூயசு கால்வாயைப்போல் அவ்வளவு முதன்மையானதாக இருக்கும்.

தமிழ்நாட்டுக்குத் "திறை"

இந்த 'தமிழன் கால்வாய்' வெட்டப்படுமேயானால், ஐரோப்பா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் போகிற கபபல்கள் எல்லாம், இந்தக் கால்வாய் வழியாகத்தான் போகும்.

அப்படிப் போகிற கப்பல்கள், இங்குள்ள அரசுக்குத் 'திறை' செலுத்தும். அதனால், தமிழ்நாட்டின் பொருளியல் முன்னேற்றம் அடையும்.

உலகக் கப்பல்கள எல்லாம், தமிழ்நாட்டுக்குத் தலைவணக்கம் செலுத்தும் காலம் கூடிய விரைவில் வரும் என்று தமிழ் மக்கள் எண்ணிக்கொண்டு இருந்த நேரத்தில், 'தமிழன் கால்வாய்' திட்டத்தைத் தில்லி கைவிட்டு விட்டதாக வந்த செய்தி, தமிழ் மக்களுக்கு மனத் துன்பம் உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது!

குறைந்த செலவு

'தமிழன் கால்வாய்' வெட்டுவதற்குச் செலவு மிகவும் கொஞ்சம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

எகிப்து நாட்டில் 'சூயசு' கால்வாய் வெட்டியபோது, அதைப் பாலைநிலத்தில் வெட்ட வேண்டி இருந்தது. அதனால் அதற்கு அதிகச் செலவு ஏற்பட்டது ஆனால், ஏற்கனவே இருக்கிற கடலில் 'தமிழன் கால்வாய்' வெட்டுவதற்குச் செலவு குறைவாகத்தான் ஆகும்.

7 கோடி உருபா செலவு செய்தால் சிறிய கப்பல்கள் போவதற்கான வாய்ப்புடனும், 15 கோடி உருபா செலவு செய்தால் பெரிய கப்பல்கள் போகக்கூடிய வாய்ப்புடனும் 'தமிழன் கால்வாயை' வெட்டலாம். (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7502

பாரதிதாசன் பாடல் தொகுதியில் வேறுபாடு

—பர். ச. மு. இளங்கோ; க. மு.

2. திருத்தம் பெற்றவை :

பாரதிதாசனின் பிற பாடல் தொகுதிகளை நோக்கும்போது மிகப் பெரிய அளவில் திருத்தங்களைப் பெற்று விளங்குவது இந் நூல் ஆகும். அத் திருத்தங்கள் பாவலரின் இலக்கிய வளர்ச்சியைக் காட்டுவன*. வால்ட் விட்மனின் புல் நிலைகள் (leaves of Grass) எனும் நூலைப் போன்று பல்வேறு இணைப்புகளையும், திருத்தங்களையும் பெற்று இந்நூல் விளங்குகிறது. முகாமையானவை வருமாறு;

1) முதற்பதிப்பில், 'போர் மறவன்' எனும் பாவியல் நாடகக் காட்சியை 1, 2, 3, 4 ஆகிய அரேபிய எண்களில் குறித்த பாவேந் தர் இரண்டாம் பதிப்பில் க, உ, ங, ச ஆகிய தமிழ் எண்களால் குறித்துள்ளார். ஆயின் மூன்றும் பதிப்பில் முதற்பதிப்பின் முறை யைப் பின்பற்றி எண்களைத் தந்துள்ளார்.

தமிழ் எண்களை அரேபிய எண்களாக மீண்டும் மாற்றியதற்குக் காரணம், பெரும்பான்மையருக்குப் புரியவேண்டும் என்ற கருத்தால் போலும்.

2) முதற்பதிப்பில், 'இனப் பெயர்' எனும் பாடலில் 1, 2, 3, 4, 5 ஆகிய அரேபிய எண்களைப் பயன்படுத்திய பாவலர் இரண்டாம் பதிப்பில் க, உ ங, ச, ரு ஆகிய தமிழ் எண்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆயினும் அதன்பின் வந்த பதிப்புகளில் முதற்பதிப்பின் முறையைத் தெளிவுக்காக மீண்டும் பயன்படுத்தியுள்ளார்.

3) 'தத்தை விதவைப் பெண் சம்மதமா? என்றுரைத்தான்
மெத்த விசேஷமென்று' மஞ்சினி
எடுத்துரைத்தான் (மு. ப. பக். 27)

என்பதில் 'விசேஷமென்று' என்பதை 'விசேடமென்று' எனத் திருத்தியுள்ளார், (இ. ப. பக். 44)

தற்பவ வடமொழிச் சொற்களைத் தமிழ் வடிவமாகத் தருதல் வேண்டுமென்றே பாவலரின் உணர்வால் இத் திருத்தங்கள் நிகழ்ந் தன போலும்.

இதேபோன்று திருத்தங்களைப் பாவேந்தர் பலவிடங்களில் செய்துள்ளார். எடுத்துக்காட்டாக, 'இஷ்டந்தான்' (மு. ப. பக்-27)

---

*. ரெனிவெல்லக், ஆசுடின்வாரன், இலக்கியக் கொள்கை (தமிழாக்கம்) முதற்பதிப்பு (சென்னை, 1968) பக்-75-79.

www.thamizham.net - Free E book No 7502

என்பதை 'இட்டந்தான்' (இ. ப. பக்-45) என்றும், 'இந்த வருஷத் தில்' (மு. ப. பக்-28) என்பதை 'இந்த வருடத்தில்' என்றும் (இ. ப. பக்-46), 'இராமானுஜனே' (மு. ப. பக்-38) என்பதை, 'இராமானுசனை' (இ. ப. பக்-54) என்றும், 'கஜின்ஸ்' (மு.ப.பக் 45) 'கசின்ஸ்' (இ. ப. ப-61) என்றும், 'ஆஸ்திகர் கருத்து' (மு. ப. பக்-72) என்பதை, 'ஆத்திகர் கருத்து' (இ. ப. பக்-106) என்றும், 'கோஷ்டமே' (மு: ப. பக்-74) என்பதை, 'கோட்டமே' இ. ப. பக்-108) என்றும் திருத்தியுள்ளார்.

4) 'செல்வர் சில்லோர் நல்வாழ்வுக்கே
எல்லா மக்களும் என்ற 'ப்ரான்சில்' (மு. ப. பக்-38) என்பதில் 'ப்ரான்சில்' என்பதை 'பிரான்சில்' எனத் திருத்தியுள் ளார். (இ. ப. பக்-54)

மெய்யெழுத்தில் ஒரு சொல் தொடங்குவது தமிழ் இலக்கண மரபு அன்று ஆதலால், மொழி முதல் உயிரெழுத்துப் பெற்று வர வேண்டி 'ப்ரான்சில்' என்பதை 'பிரான்சில்' எனத் திருத்தினர்.

5) 'ஒழுங்கெலாம் நம்மாதர் வாரத்தின் ஏழுநாளும்
உயிர் விரதம் அநுஷ்டிப்பதால்' (மு, ப. பக்-73) என்ப தில் 'அநுஷ்டிப்பதால்' என்பதை 'மேற்கொள்வதால்' எனத் திருத்தி யுள்ளார். (இ. ப. பக்-107)

அநுஷ்டிப்பதால் என்பது வடமொழிச் சொல்லாதலின் அதை 'மேற்கொள்வதால்' எனத் திருத்தினர். பாவேந்தரின் பாடல் நடை வளர்ச்சியை அறிவதற்கு இது மிகவும் துணைபுரிகிறது.

இதுபோன்று வடமொழிச் சொற்களை முதற்பதிப்பில் கையாண்ட பாவேந்தர். பின்னைய பதிப்புகளில் அவ்வடமொழிச் சொற்களைக் களைந்து, அச் சொற்களுக்கு ஏற்பப் பொருள்படும் தமிழ்ச் சொற்களைப் பெய்வதில் கவனம் செலுத்தியுள்ளார்.

எடுத்துக் காட்டாக,

'சந்தோஷமும்'	(மு. ப. பக்-74)	என்பதை,
'மன மகிழ்வும்'	(இ. ப. பக்-108)	என்றும்,
'சந்தோஷம்'	(மு. ப. பக்-76)	என்பதை,
'மகிழ்ச்சி தான்'	(இ. ப. பக்-110)	என்றும்,
'கல்யாண நாள்'	(மு. ப. பக்-76)	என்பதை,
'கடிது மணநாள்'	(இ. ப பக்-110)	என்றும்,
'சீவித்தனே'	(மு ப. பக்-78)	என்பதை,
'வாழ்ந்து வந்தாய்'	(இ. ப. பக்-111)	என்றும்,
'நிசமான வார்த்தை'	(மு. ப. பக்-79)	என்பதை,
'நேரான வார்த்தை'	(இ. ப. பக்-113)	என்றும்,
'வேத சாஸ்திரம்'	(மு. ப. பக்-80)	என்பதை,

www.thamizham.net - Free E book No 7502

'வேத நூலின்' (இ. ப. பக்-113) என்றும்,
'தாபிப் பார்' (மு. ப. பக்-83) என்பதை,
'நிறுவுவர்' (இ. ப. பக்-116) என்றும்,
'சகஜகுணமேனுமுண்டோ? (மு. ப. பக் 90) என்பதை,
தருமகுணமேனுமுண்டோ? (இ. ப. பக்-124) என்றும்
திருத்தியுள்ளார்.

6) 'தாம்பூலம் தின்பார் தமிழ் ஒன்று சிந்திடுவார்
காம்பிற் கனிரசம்போல் காதல்ரசம் பொங்கும்' (மு. ப. பக்-44) என்பதில் 'காம்பிற் கனிரசம்போல் காதல் ரசம் பொங்கும்' என்பதைக் 'காம்பிற் கனிச்சாறுய்க் காதலின் சாற்றை' (இ. ப. பக்-60) எனத் திருத்தியுள்ளார்.

'ரசம்' எனும் வடசொல்லை 'சாறு' எனத் தமிழ்ப்படுத்திய தோடு, 'காதல் ரசம் பொங்கும்' என்பதை 'காதலின் சாற்றை' எனவும் திருத்தியுள்ளார்.

7) 'ஆங்கிலவர் பாரதியார் ஆர்த்த **கவிரசத்தை**
வாங்கியுண்ணக் கண்ட பின்னர்... ..., (மு. ப. பக்-62) என்பதில் 'ஆர்த்த கவிரசத்தை' என்பதை 'ஆர்த்த கவித்தேனை' (இ. ப. பக்-62) எனத் திருத்தியுள்ளார்.

'ரசம்' எனும வடசொல்லைத் தவிர்க்க விரும்பியதாலும், 'ஆர்த்த கவிரசத்தை' என்பதினும், 'ஆர்த்த கவித்தேன்' என்பது விழுமிய தொடர் என்பதாலும், இவ்வாறு திருத்திஞர் போலும்.

8) 'விழியின் உருட்டலிலே வீரம் விளைத்துப்
பொழிகின்ற அன்பினுல் எம்மைப் புதுக்குவார்'
(மு. ப. பக்-44)
எனும் பாடற்பகுதி, பின்னைய பதிப்புகளில்
'பொழிகின்றதன்மையால் எம்மைப் புதுக்கி
அழிகின்ற நெஞ்சத்தை அன்பில் நனைத்திடுவார்' (இ. ப. பக்-60) என்று திருத்தப்பட்டுள்ளது.

'விழியின் உருட்டலிலே வீரம் விளைத்து' எனும் அடி நீக்கப் பெற்று 'அழிகின்ற நெஞ்சத்தை அன்பில் நனைத்திடுவார்' எனும் அடி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

'அன்பில் நனைத்திடுவார்' என்று பின்னடியில் கூறிவிட்ட படியால், முதலடியில உள்ள 'பொழிகின்ற அன்பினுல்' என்பதைப் 'பொழிகின்ற தன்மையால்' என்றும் கருத்து முடிவுருததால் 'எம்மைப் புதுக்குவார்' என்பதை 'எம்மைப் புதுக்கி' என்றும் திருத்திஞர்.

www.thamizham.net - Free E book No 7502

9] "**செகத்தார்க்குப் பாரதியார் சித்திரிப்பார்**
தெளிவாக அழகாக உண்மையாக' (மு. ப. பக்-49) என்பதில் 'செகத்தார்க்குப் பாரதியார் சித்திரிப்பார்' என்பதை 'திகழ் பார்க்குப் பாரதியார் எடுத்துச் சொல்வார்' (இ. ப. பக்-65) எனத் திருத்தியுள்ளார்.

'செகத்தார்க்கு' எனும் வடசொல்லை நீக்கித் 'தமிழ் பார்க்கு' எனத் திருத்தினார்.

'பாரதியார் சித்திரிப்பார்' என்பதனினும் 'பாரதியார் எடுத்துச் சொல்வார்' என்பதில் ஓசை நயமும், பொருள் தெளிவும் இருப்பதால் அவ்வாறு திருத்தினார் எனலாம்.

10) 'புகுத்து மொழிப் பேச்செல்லாம் கங்கையாற்றுப்
புனல்போலத் தொடர்வதுண்டாம் அன்னார் பாட்டில்,
(மு. ப. பக்-49) என்பதில் 'கங்கையாற்றுப் புனல்போலத் தொடர்வதுண்டாம்' என்பதை பொன்னியாற்றுப் புனல்போலத் தொடர்வதுண்டாம்' (இ. ப. பக்-65) எனத் திருத்தியுள்ளார்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலை கூடுகிறது!

தாள், மை, பிற அச்சுப் பொருள்களின் அளவுக்கு மீறிய விலையேற்றத்தையும் பொருட்படுத்தாது, இதுவரையிலும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** இதழ்களுக்கு விலை கூட்டாது, பொறுமையுடன் மிகுந்த இழப்பைத் தாங்கி வந்தோம். நிலை கட்டு மீறி விட்டதால், இழப்பை ஓரளவு குறைக்கும் நோக்கத்துடன் **இந்த மாதம் முதல்** இதழ்களின் விலைகளைக் கீழ்வருமாறு உயர்த்தியுள்ளோம். அன்பர்கள் இச்சுமையை அன்புடன் பகிர்ந்து கொண்டு இன்று போல் என்றும் துணை நிற்கக் கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழி

தனி யிதழ் : 1—25.
ஆண்டுக் கட்டணம் : 15—00
அரையாண்டுக் கட்டணம் : 8—00

தமிழ்ச்சிட்டு

தனியிதழ் : 0—50.
ஆண்டுக் கட்டணம் : 6—00
அரையாண்டுக் கட்டணம் : இல்லை.

(பிற விளக்கங்களுக்கு எழுதிக் கேட்க)

www.thamizham.net - Free E book No 7502

வடமொழியில் 'அருச்சனை'யா?

—பாவலர். குமர நடவரச ஐவப்பன்.

(சூலை மாத இடையில் பவானியிலும் பொள்ளாச்சியிலும் பொருட் செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கனார் புரப்பாளராக இருந்து நடத்திய கோடி அருச்சனைப் பெருவிழாக்களில் தமிழ் புறக் கணிக்கப் பெற்று, வடமொழியாகிய சமற்கிருதமே ஆட்சி செலுத் திய அவலத்தைக் கண்டு பொறாத தமிழ்த்தாய் வருந்திக் கூறி அறிவுறுத்தியதாக அமைந்ததிப் பாடல். பாவலரின் அழுங்கிய உள்ளம் இப் பாடலில் நன்கு தெரிகிறது.)

"அடமகனே அனைத்துலகம் போற்று கின்ற
அருந் தமிழைப் பேணுகின்ற நோக்க மில்லை;
வடமொழியா, இறையருட்கு? மக்கட் கூட்ட
வானியிலே விழாவெடுத்தாய், மானக் கேடு!
தடம்புரண்டு செந்தமிழ்ச்சீர் கெடுக்க வந்தாய்
தமிழ்மகனா? தக்கபடி கற்றோன் தானா?
மடத்தனத்தைப் பரப்புகின்றாய்; மாசில் லாத
வளர்தமிழைப் புரக்காயோ?" என்றாள் தாயும்!

இனங்கெடுக்க வந்தாயோ? இறைவன் தாளை
ஏத்துதற்கு வடமொழியா வேண்டும்? உன்றன்
மனங்கெடுத்த தாரோசொல்? மதிகெ டத்தான்
வானியிலே வாய்மணக்கத் தமிழ்மணக்க
மனமுருகப் பாடிவைத்த தமிழ்த்தே வாரம்
வாயாரப் பாடாமல் மதித்தி டாமல்
சினம்பெருகச் சீர்மையிலார் புன்மொழிக்குத்
திருத்தொண்டு புரிவாயோ என்றேன் தாய்நான்!

"அயற்புலத்தார், உலகிருக்கும் அனைத்து நாட்டார்
அருள்நிறையைப் பெறுவதற்கே ஆக்க மிக்க
நயன்மொழியாம் நற்றமிழ்தான் என்ற றிந்தே
நல்லகத்தில் நல்லமைவு பெறுவ தற்கே
மூயன்றுதமிழ் கற்றருளைப் பெறுகின் றார்கள்.
முத்திருக்க, மாணிக்கம் இருக்கக் கல்லின்
வயப்படுதல் வாலறிவோ? மாலிங் கா நீ
வந்தெனையே சூழ்கவெனத் தாய ழைப்பேன்!"

"சொந்தமுடன் தென்னகத்தில் தொழில்கள் பேணித்
தொடங்கிவைத்தாய்; பயன்மிகுந்த வழிவ குத்து
மூந்துபுகழ் கொண்டவன் நீ! எழுச்சி கொண்ட
முழுமாந்தத் தரமிருந்தும், ஏனோ நீதான்

www.thamizham.net - Free E book No 7502

இந்தநிலம் ஏற்காத இறைமை வேட்டல்
இழிந்தவரைக் கொண்டிங்கு நடத்து கின்றாய்.
மந்தியின்கைப் பூமாலை என நீ இங்கே
வண்டமிழை வைத்தாயே! என்பேன் தாயும்''

''மடம்பெருக்கும் வழியினிலே இறைமை போற்ற
மனங்கொண்டாய்; புரியாத சொல்முழக்கை
வடமொழியில் அருள்பெறவே வழங்கிக் கோடி
வாய்வலிக்க முழக்கமிட்டுக் காலம் போக்கும்
முடக்குபலி தவிர்த்தெழுந்து தமிழில் என்றும்
முனைப்பாக வழிபாடு முறையாய் ஈண்டு
நடக்கவழி செய்வாயேல் நானு வப்பேன்;
நடிப்பாயேல் பொறுக்கேன் நான்'' என்பாள் தாயும்!

அறம்பெருக்கப் பொருள்பெருக்க—இன்பம் துய்க்க
அமைவான வழியெல்லாம் உலகு வக்கச்
சிறப்பான தூயதமிழ் இறையை எண்ணத்
திறமிகுந்த செறிவான மொழியி ருக்க,
குறளிருக்க, வடமொழியைக் கொண்டு நீயோ
கூசுகிலா கொடுமையின்று புரிகின் றாயே?
குறளியந்தான் உனைத்தடுத்துக் கேட்கா விட்டால்
குறைமொழிகள் எனைஅரிக்கும் என்பாள் தாயே.

''தெள்ளியனே தென்னகத்துக் கொடையின் மன்னா!
தேர்ந்துபல நலம்பயக்கும் மன்றம் கண்டாய்!
வள்ளாலார் பணிமன்றத் தலைவ னாக
வடலூரில் பொறுப்புக்கள் ஆட்சி எல்லாம்
உள்ளவனே எண்ணிப்பார், இதனை நீயும்
உளநொந்து வேதத்தைச் சாத்தி ரத்தைக்
கிள்ளியெடுத் தெரிகின்றார் வள்ள லார்நீ
கேளாமல் அவர்வாக்கை மீறு கின்றாய்?''

''அமிழ்தூறும் வாய்மொழியும், அன்புப் பேச்சும்,
அருள்சுரக்கும் நல்நோக்கும், தொழில்கள் நாளும்
அமைப்பதுவும் தமிழகத்தில் தாழ்வே இல்லை;
இருந்தாலும் அருந்தமிழைப் புறக்க ணித்தாய்;
அமிழ்தான செந்தமிழை—இனத்தை—நாட்டை
அணைக்காமல், பிறமொழியை நத்து கின்றாய்!
உமியா நீ? பதரா நீ? என்றே உன்னை
உன்னுடைய தாய்நானும் நொந்து கேட்பேன்''

www.thamizham.net - Free E book No 7502

"தக்கவன் நீ! அறிவியலைக் கற்ற வன் நீ!
தாளாண்மைப் பலதொழில்கள் அமைத்த வன்மை
மிக்கவன் நீ! மேலான பொருளை ழித்து
விளங்காத புலைமொழியார் தமைய ழைத்தாய்;
முக்குகின்றார்; முணகுகின்றார்; அதனால் நாடு
முழுமைநலம் அடைந்திடுமோ! சற்று மில்லை!
இக்கணத்தில் இதைவிடுவாய் என்று சொல்வேன்!
என் "மன்னே" உனையீன்ற தாய்நான்; கேளாய்"

"வண்ணக்க நூலாடை, வாரிவிட்ட
வழுக்கையழ கினியநடை, வயங்கும் செம்மை
எண்ணமிகக் கொண்டமைந்த எழிலார் தோற்றம்!
இத்தனையும் சிறப்பாக அமைந்த நீயோ
புண்படவே என் றனுளம் செயலெடுத்தாய்!
போற்றிடுமோ உலகுமுனைத் தூற்றும்! ஆம்ஆம்!
மண்டுமுன்மேல் மாபழியும் என்று நொந்தேன்
மகனேகேள்!" என்பாளே தமிழாந் தாயும்!

"கெடுதலையே செய்வதற்கா உன்னை யீன்றேன்?
கெழுதகைமைப் பீடுடைய தீந்த மிழ்நூல்
படுதலிலை உன் னுளத்தில்; பற்றும் இல்லை!
பயனற்ற வடமொழியில் சிந்தை கொண்டு
அடுதலையே விரும்புகின்றாய்; தமிழ ருன்னை
அழிக்காமல் போவாரோ? எண்ணிப் பார்த்து
விடுதலையே கொள்கவெனத் தாயின் பற்று
விடலறியா உள்ளத்தால் கேட்கின் றேன் நான்!"

"கடுகளவு நஞ்சுவிட்டால் பால்தி ரிந்து,
காணுமது நெஞ்சேயாகிப் பயன்கு லையும்.
தொடுசுவையில் முலர்தந்த நல்ல நூல்கள்
தொகை நூல்கள் எண்ணிறந்த தமிழ கத்தில்!,
கெடுமனத்தால் ஆரியத்தைக் கலந்தே இன்று
கொடுமைசெயும் திருப்பராய்த் துறையார் போல
வடுமிகுந்த செயல்செய்வார் பின்னே நீயும்
வழிமாறிப் போகாதே என்பேன் தாய்நான்!"

வடசொற்கள் போல் மயக்கும் தமிழ்ச் சொற்கள் சில

அவமானம், உவமானம், மேதை, அந்தரம், மங்கலம், சப்பாத்தி, தாகம், சால்வை, தானம், மந்திரம், மந்திரி, யாமம், சவ்வு, உத்தி, சாவித்தல், தங்கம், பூசாரி, மானியம், மாயை, அகங்காரம், சித்தம், சித்திரம், உச்சம், உத்தரவு, கதம்பம், குமுதம், சதுரம், சவம், சொலித்தல், தருக்கம், தோரணம், பண்டிதன், பூதம், மத்தளம், மாயை, வஞ்சகம், வயிரம், வாடகை, மாதிரி, தங்கம், முதலிய.

www.thamizham.net - Free E book No 7502

தமிழா! - இனியும் என்ன செய்யப் போகிறாய்?

மொழி—இனம்—நாடு—மறந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் தமிழர்களுக்குத் தலைவர்கள் என்றால்—

அய்யகோ—தமிழா நீ ஏன் உணர்வற்ற பிண்டமாய் உள்ளாய்? உமக்கு ஒரு தலைவர் தேவைதானா?

தம் உறுப்புகளை இழந்த பின்னும் போராடி வெற்றி பெற்ற உன்னின் மூதாதையரின் வாழ்வை மறந்தனையோ?

தலைவர் இருந்தால்தான் நீ செயல்படுவையோ?—உன் உணர்வுகள் மழுங்கி விட்டனவா?

தமிழா, இந்தி வலுக் கட்டாயமாகத் திணிக்கப்படுகிறதே—அறிவாயா, நீ!

இந்தி பேசாத மாநில மக்களில் நூறு பேரை இந்தி பேசும் மாநிலப் பல்கலைக் கழகத்தில் இணைத்துப் பயில வைக்கப் போகிறார்களாம்!

கல்வித்துறை முழுமையையும் நடுவணரசு எடுத்துச் செய படுத்தப் போகிறதாம்!

தமிழா—நீ சென்று இந்தி பயிலப் போகிறாயா?

காசுக்காகக் கையேந்தி—உன் மான உணர்வை இழக்கப் போகிறாயா?

இந்தியில் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு—இயல்பாகத் தருகின்ற உதவித் தொகையல்லாமல்—மேலும் உரு. 350 கொடுக்கப் போகிறார்களாம்!

—நீ உன் தமிழுக்கு என்ன செய்தாய்?

உன் நாட்டை மறந்து விட்டாயா?

உன் இனத் தலைவர்களைப் பற்றிக் கவலை கொள்ளாதே—உன் வழியில் செயல்படு—போராட்டத்தில் இறங்கு!

மொழிக்காக, இனத்திற்காக உன் உயிரைப் பணயம் வைக்கத் தயங்காதே.

"எழுக தமிழனே! இனநலம் கருதுக!

. . . .

உன்றனை விடுதலைக் கொப்புவித் திடுக!

—மா. பொழிலன், (த. இ.)

www.thamizham.net - Free E book No 7502

தையும், காணாத தமிழர்க்கு மட்டுமன்றிக் கலைஞர் அவர்களுக்குமே விளங்கக் காட்டும் கனிமொழிகளும் இலங்கக் கண்டு இன்புற்றேன். 'நீங்கள் அரசியலை விட்டு உடனடியாக விலகுங்கள். உலகத் தமிழின விடிவுக்கென ஒரு விடுதலை வரலாற்றைத் தொடங்கி வையுங்கள்' என்று கலைஞர் அவர்களைத் தாங்கள் வேண்டுவதைத், தமிழர் நலமும் கலைஞர் அவர்களின் நலமும் நாடும் காலத்தின் குரலாகவே கருதுகின்றேன். மேலும் பல மொழிகள் தங்களின் ஒப்பற்ற அரசியல் தெளிவையும், தமிழின விடுதலை வேட்கையையும் விளக்குவனவாய் மிளிர்கின்றன...தங்களின் அன்பழைப்பின் ஆர்வ மொழிகள், தமிழின விடுதலை வேட்கையின் தங்கள் உள்ளத் துடிப்பையும், கலைஞர் அவர்களின் அறிவாற்றலில், தமிழ்ப்பற்றில், தமிழினப் பற்றில், தலைமையில் தாங்கள் கொண்டிருக்கும் குன்றா நம்பிக்கையையும் தெளிவுறக் காட்டச் சிந்தை மகிழ்ந்தேன். ஆசிரிய வுரை கலைஞர் அவர்களுக்கும் தமிழினத்துக்கும் காலத்தில் கிடைத்த கைவிளக்காய்க் காட்சியளிக்கின்றது! அறத்தையும் அஞ்சாமையையும் தம்மிரு கண்களாய்க் கொண்ட கழகக் காலப் பாவலர், அந்நாட் காவலர் நலனும் நாட்டு நலனும் கருதிக் கூறிய கனிமொழிக் காட்சிகளெல்லாம் ஆசிரியவுரையைப் படித்து முடித்த போது என் மனத்திரையில் நிழலாடக் கண்டேன்! "நீண்ட நெடும் வரலாறு உங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றது. இன்றைய நிலையில் உலகத் தமிழர் விடிவுக்கென எழுச்சிக் குரல் கொடுக்கும் இன்னொரு தலைவரை நாங்கள் காண முடியவில்லை." என்ற தங்களின் மொழிகளில் தெளிவும் உண்மையும் திட்பமும் நுட்பமும் அன்பும் ஆர்வமும் மேலோங்கி விளங்கக் கண்டு மெய் சிலிர்த்தேன்! இந்நாள் தமிழகத்தின் இணையற்ற பாவலரேறாய்த் திகழும் தங்களின் அறவுரையை இந்நாள் தமிழினத்தின் இணையற்ற தலைவராய் விளங்கும் தமிழறிந்த கலைஞர் அவர்கள் செவியேற்று இவ் வையம் போற்றத் தமிழின விடுதலைக் கொடி ஏற்றுவார் என்றே நம்புகின்றேன்.

தாங்கள் விடுக்கும் மொழியின் வெற்றி நம் தமிழ்த்தாயின் வெற்றி என்று யான் கருதுவதால், தங்களின் வாய்மொழி வெல்க! வெல்க!! என்று மனம் கனிந்து வாழ்த்துகின்றேன். வெல்க தமிழ்! மலர்க தமிழகம்!! —புலவர். பொதிகைச்செல்வன், பவானி

0:794: பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம். கடந்த திங்கள் நெல்லையிலே 'பார்ப்பனர் ஆளுமை எதிர்ப்பு' மாநாட்டினைத் திராவிடர் கழகத் தோழர்கள் நடத்தி உள்ளனர். தமிழின மக்களிடையே உறங்கிக் கிடந்த இன உணர்வினை இஃது தட்டி எழுப்பியுள்ளது. இதன் அடுத்த கட்டமாகத் தில்லையில் வரும் 23, 24-7-80 தேதிகளில் மாநாடு நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். கட்சி, கொள்கை வேறுபாடு இன்றிப் பார்ப்பனர் அல்லாத அனைவரையும் துணை சேரும்படி அவர்கள் வேண்டியுள்ளது, கவனிக்கத்தக்கது. எனவே தமிழின முன்னேற்றத்திற்கென்று தாங்களை எங்களுக்கு வழங்கி விட்ட தங்களின் தலையாய கருத்தினையும், தென்மொழி மறவர்கள் ஆற்றிட வேண்டிய செயல் குறித்தும் விளக்கமாக எழுதிட வேண்டுகிறேன். இப்போராட்டத்தில் நமது பங்கு பற்றியும் தெளிவுறுத்திடுக என்றும் அன்புடன் வேண்டுகிறேன். —மு. பழ. சதாசிவம், சேலம்-6

www.thamizham.net - Free E book No 7502

0:795: பேரன்புடை ஐயா, காலம் மீண்டும் பின்னோக்கிப் போய்க்கொண்டுளது. நாளிதழிற் காணும் அன்றாடச் செய்திகள் மனநிறைவு தரவில்லை. வைகலும் 'முற்படுத்தப்பட்டோர் இயக்கம்' எனும் போர்வையில் ஒவ்வோர் ஊரிலும் ஆரியப் பார்ப்பனர் ஒன்று கூடுகின்றனர். ஆயின், இன்றைய செய்தியோ நிலை மட்டு மீறு வதையே காட்டுகின்றது. நான் குறிப்பிடுவது, 'பிராமணர்கட்காக நான் வாதாடுகிறேன்' எனும் (அ. தி மு. க. சார்ந்த எழுத்தாளர்) அடியார் எழுதிய நூலின் வெளியீட்டு விழா, அவர்க்குப் பாராட்டு விழா, அவர்தம் இதழ்க்குப் (நீரோட்டம்) பொருள் வழங்கல் விழா ஆகியன பற்றிய செய்தியாகும். அதனை உடன் இணைத்துளேன்.

சின்னாள் முன்பு, 'முற்படுத்தப்பட்டோர் இயக்கம்' மாநாடு, பேரணி ஆகியன நடாத்தத் தீர்மானித்துள்ளது பற்றிய செய்தியுங் கண்டிருப்பீர்கள்.

ஐயா, நாம் விரிவான செயல் திட்டங்கள் வகுத்துச் செயற்பட வேண்டிய வேளை வந்து விட்டது...நிலைமையை உணர்த்துங்கள். எங்கட்குக் கட்டளை யிடுங்கள். கொதிக்கிறது குருதி! வெடிக் கட்டும் புரட்சி! இன்றேல், விடிவுக்கு வழியின்றியே போய்விடுமோ என அஞ்சுகிறேன்.

தூங்கப் படுத்தனர் தமிழர்! இனியவர்
துயில்நீங் கிடுதல் கடினம்—உயிர்
வாங்கப் புறப்படு; பகைமுன் உறையின்
வாளைக் கையினில் எடடா!

—தமிழ்ச்சிறுவன் கா. சுந்தரன் மதுரை-1.

0:796: அன்புள்ள ஐயா, வணக்கம். அலுவலகப் பணியின் பொருட்டுக் கோவை வந்தேன். இங்கு நான் ஆய்வுப்பணி செய்யும் அலுவலகத்தில் அலுவலரின் மிசை மீது பெயர்ச் சட்டம் வைக்கப் பட்டிருந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் பெயர் எழுதப்பட்டிருந் தது. அவரின் கல்வித் தகுதியையும் அவ்வாறே ஆங்கிலத்திலும், தமிழில் க. இ, ச. இ., என்றும் எழுதி இருப்பதைக் கண்டேன் "தமிழ்ப்பற்றுடையவரா அலுவலர்" என உசாவினேன். "ஆமாம், ஆனால் அவ்வாறு தமிழில் எழுதக் காரணமாக இருந்தவர் அவரு டைய எழுத்தர். அவர் பெயர் சி. மாரியப்பன்" என்று அலுவலக நண்பர்கள் கூறினார்கள். தமிழர் சி. மாரியப்பன் அவர்களைப் பார்க்க விரும்பினேன். பார்த்தேன். 'தென்மொழி' அன்பரா? 'ஆம்' என்றார். 'தமிழ் வாழ்க' எனப் பொறிக்கப் பெற்ற கணையாழி அணிந்திருக் கிறார். அவரின் பேச்சிலும் - செயலிலும் தென்மொழியின் துடிப் பினைக் கண்டேன்; நடையில் மிடுக்கினைக் கண்டேன்.

—கலச. இராமலிங்கம், சென்னை-14.

0:797: ஐயா, வணக்கம்—கலைஞர்க்குத் தாங்கள் விடுத்த வேண்டுகோள் எம்போல்வாரின் உள்ளக் கிடக்கையை வெளிப் படுத்துவதாக இருந்தது. தென்மொழி, தமிழ்ச்சிட்டு தொடர்ந்து வருவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது.

—தமிழமல்லன், புதுச்சேரி-9

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600005 (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7502